# யொவுன் புரய

## கைநூல 2016

## சிகிரிய

## எதிர்கால ஆரம்பம்

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

இலங்கை இளைஞர் கழக சம்மேளனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவது

யொவுன்புர நிகழ்ச்சிக்கான கைநூல்

# யொவுன்புர 2016

**2016**,மார்ச் **30** தொடக்கம் **2016** ஏப்ரல் **03** வரை

சீகிரியா

## எதிர்காலம் தொடங்கிவிட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் மாண்புமிகு பிரதமர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

மனித வாழ்வில் இளமைப்பருவம் / வாலிபம் என்பது சுதந்திரமானதும் விளையாட்டுடன் கூடியதுமான இனிமையானதோர் காலகட்டமாவதுடன் தனியாள் ஆளுமை விருத்தி தொடர்பாக கூடிய பாதிப்புச் செலுத்தும் மற்றும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பாரிய போராட்டங்களை நடாத்தும் அதிகூடிய ஆக்கபூர்வத் தன்மை கொண்ட ஒரு பருவமும் ஆகும்

தற்கால இளைஞர்கள் வசந்த காலத்தில் புயல் வீசும் நேரத்தில் ஆழமான கடலொன்றில் பிரயாணம் செய்யும் பாய்க் கப்பல் ஒன்றினைப் போன்றவர்கள்.சரியான வழிகாட்டல் பாதை ஒன்றினூடாக வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டுமாயின் அறிவாலும் விழிப்புணர்வாலும் கூடிய விசையுடன் வாழ்க்கை எனும் படகினைத் திசை திருப்பிக்கொள்ளல் வேண்டும். செலுத்தல் வேண்டும்.

அதற்காகத் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,தேசிய இளைஞர் சேவைகள் சபை என்பன இணைந்த வகையில் ஏற்பாடு செய்துள்ள யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் அதற்கான பாரியதோர் தூண்டுதலாக அமையும் என்பதனை எதிர்பார்க்கின்றேன்.'வாலிபம்' என்பதனை பொருள்கொள்ளச் செய்வதற்காக நான் இளைஞர் விவகார மற்றும் தொழில் வாய்ப்பு அமைச்சராக இருந்தபோது 1984 இல் புலஸ்திபுரயவில் தொடங்கி வைத்த யொவுன்புர நிகழ்ச்சிக்கு மீண்டும் உயிர் கொடுக்க முடிந்ததனையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் இளைஞர் யுவதிகள் நல்லிணக்கம் மற்றும் இணக்கப்பாடு தொடர்பாக புரிந்துணர்வு ஒன்றினைப் பெற்றுக்கொள்ளவும் இளைஞர் அபிவிருத்தித் துறையின் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாட்டு இளைஞர் யுவதிகளுடன் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளவும் பரஸ்பர புரிந்துணர்வினை மேம்படுத்தும் ஒற்றுமை,சகவாழ்வு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடவும் தேசிய அபிவிருத்தி தொடர்பாக இளைஞர் சமுதாயத்தினரிடம் முறையானதோர் விவாதத்தினை ஏற்படுத்தி கருத்துக்களையும் முன்மொழிவுகளைனயும் பெற்றுக்கொள்ளவும் யொவுன்புர சிறந்ததோர் மேடையாக அமையும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீகிரியாப் பிரதேசத்தில் நடைபெறும் யொவுன்புர நிகழச்சி நவீன உலகின் சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய இளைஞர் சமுதாயம் ஒன்றினை தேசத்திற்கு வழங்க சிறந்ததோர் அடித்தாளமாகட்டும் என பிரார்த்திக்கின்றேன்.

ரனில் விக்ரமசிங்ஹ
பிரதமர்
2016.03.03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவலுவல்கள் கௌரவ இராஜாங்க அமைச்சரின் செய்தி

எதிர்கால உலகினை வெற்றிகொள்ளக் கூடிய இளைஞர் சமுதாயம் ஒன்றினை உருவாக்க தற்போதைய அரசு நிதமும் அரப்பணிப்புடன் செயற்படுகின்றது.இளைஞர்களின் சக்தியினை மேம்படுத்துவதும் சுபீட்சமான எதிர்கால இலங்கையொன்றினைக் கட்டியெழுப்பவதும் மேற்படி பணியின் முக்கிய அடித்தாளமாகும்.இளைஞர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகள் இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மாத்திரம் வரையருக்கப்பட்டிருந்த இருண்ட காலகட்டம் தற்போது முடிவடைந்து விட்டது.

தற்போது இளைஞர்கள் இரு கைகளையும் நீட்டிய வண்ணம் இலக்குகளை அடையவும்,சர்வதேசத்தை நோக்கிச்செல்லவும் தற்போதைய அரசு வாயில்களைத் திறந்துவிட்டுள்ளது. மாண்புமிகு பிரதமர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்கள் இளைஞர் விவகார அமைச்சராக இருந்த காலகட்டத்தில் வழங்கிய யொவுன்புர எண்ணக்கருவிற்கு மீண்டும் உயிர் கொடுத்தல் இந்த நாட்டு இளைஞர்கள் பெற்ற அரும் பெரும் பாக்கியமாகும்.யொவுன்புர நிகழ்ச்சியினை செயன்முறை ரீதியில் யதார்த்தமாக மாற்ற தேசிய இளைஞர் சேவைகள் சபை உட்பட சகல தரப்பினர்களுக்கும் பலம் கிடைக்கட்டும் என பிரார்த்தனை செய்கின்றேன்.

நிரோஷன் பெரேரா

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள்,

இராஜாங்க அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள்அமைச்சுச் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

நல்லிணக்கத்துடனான அரசாங்கப் பொறிமுறை ஒன்றான எமது இலக்கு மொத்த தேசத்தினதும் சமூக பொருளாதார விருத்திக்கான செயற்பாடுகளை மேற்கொள்வதாக இருத்தல் வேண்டும். மேற்படி பணியின் ஆரம்ப கட்டமாக இருக்கவேண்டியது நாட்டின் இளைஞர் சமுதாயத்திற்கு புதியதோர் சந்தர்ப்பத்தினை வழங்கல் மற்றும் இளைஞர் யுவதிகளை லௌகீக ரீதியாகவும் மற்றும் ஆன்மீக ரீதியாகவும் வலுப்படுத்தல் என்பனவாகும்.

1984 ஆம் ஆண்டில் தேசிய யொவுன்புர நிகழ்ச்சியினை ஆரம்பித்து தேசத்தின் இளைஞர் யுவதிகளுக்கு புதியதோர் வாய்ப்பினை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டபோதிலும்,மேற்படி கருத்திட்டத்தினை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள் வழங்கிய வழிகாட்டலை மிகவும் பாராட்ட வேண்டும்.உண்மையிலேயே தற்காலத்தில் பல்வேறு பாதைகளில் சென்று நிர்க்கதியாகும் இளைஞர்களுக்கு புதியதோர் வழிகாட்டலை மேற்கொள்வதற்காக யொவுன்புர நிகழ்ச்சியின் ஊடாக பாரியதோர் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இன,மத,சாதி என்ற எதுவித பேதங்களுமின்றி மொத்த இளைஞர்களும் ஒரே முகாமில் ஒத்துழைப்புடன் செயற்பாடுகளில் ஈடுபடல் இக்கருத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.அதற்கமைய சகவாழ்வுடனான இளைஞர் சமுதாயம் ஒன்று உருவாகட்டும் என பிரார்த்திப்பதுடன், யொவுன்புர நிகழ்ச்சியினை வெற்றிகரமாக நடாத்தி முடித்து இளைஞர் படையணியினை புதியதோர் பாதைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டுச்செல்ல ஆற்றல் கிடைக்கட்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

எம்.ஐ.எம்.ரபீக்
செயலாளர்,
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கௌரவ பிரதமர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்களின் எண்ணக்கருவிற்கு ஏற்ப 1984 ஆம் ஆண்டில் பொலன்னறுவைப் பிரதேசத்தினை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் 27 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் அவருடைய வழிகாட்டலின் கீழேயே நடாத்தக் கிடைத்தமை இலங்கையின் இளைஞர்கள் பெற்ற சிறந்ததொரு வெற்றியாக நான் கருதுகின்றேன்.

"கடந்த கால மரபுரிமைகளின் ஊடாக மீண்டெழும் உலகொன்றினை நோக்கி" எனும் தொனிப்பொருளின் கீழ் அன்று ஆரம்பிக்கப்பட்ட யொவுன்புரய இன்று "எதிர்காலம் ஆரம்பித்துவிட்டது" எனும் தொனிப்பொருளினை அடிப்படையாகக்கொண்டு 5000 இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் 2016,மார்ச் 30 ஆந்திகதி முதல் ஏப்ரல் 03 ஆம் திகதி வரை சீகிரியா வான் படை வளாகத்தில் நவீன தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி நடாத்தப்பட இயலுமாகவுள்ளமை தொடர்பாக நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சகல இனங்களையும் சேர்ந்த,இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு தேசிய நல்லிணக்கம் மற்றும் இணக்கப்பாடு தொடர்பாக புரிந்துணர்வு மற்றும் அனுபவங்கள் என்பவற்றை பரிமாரிக் கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கல்,இளைஞர்களின் அபிவிருத்தித் துறைகள் சார் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாட்டு இளைஞர் யுவதிகளுடன் அனுபவங்கைப் பரிமாறிக் கொள்வதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கல் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கிடையில்,பரஸ்பர புரிந்துணர்வினை விருத்தி செய்வதற்காக கல்வி,விளையாட்டு,கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்பவற்றின் ஊடாக ஒற்றுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சகவாழ்வு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளுக்கான சந்தர்ப்பத்தினை வழங்கல்,தேசிய அபிவிருத்தியின் போக்குகள் தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கிடையில், கலந்துரையாடல்களை நடாத்தி அதனூடாக இளைஞர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பன மேற்படி யொவுன்புர நிகழ்வினூடாக எதிர்பார்க்கப்படும் நோக்கங்களாகும்.

யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்பாடு செய்வதற்காக ஆலோசனைகளையும் மற்றும் வழிகாட்டல்களையும் பெற்றுத் தந்த மாண்புமிகு பிரதமர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்களுக்கும்,சட்டம் மற்றும் சமாதானம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் மதிப்பிற்குரிய சாகல ரத்னாயக்க அவர்களுக்கும்,தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மதிப்பிற்குரிய நிரோஷன் பெரேரா அவர்களுக்கும்,இந்தப் பணியினை வெற்றியடையச் செய்வதற்காக ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டதரணி டபிள்யு.ஜீ.எஸ்.எரந்திக
தலைவர்/பணிப்பாளர் நாயகம்,
தேசிய இளைஞர் சேவைகள் சபை.
மஹரகம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இளைஞர் கழக சம்மேளன செயலாளரின் செய்தி

இலங்கையிலுள்ள இளைஞர்களுக்கிடையில்,பரஸ்பர புரிந்துணர்வு,நட்புறவு,ஒற்றுமை மற்றும் சகவாழ்வு என்பவற்றை ஏற்படுத்தும் அடிப்படை நோக்கில் 1984 ஆம் ஆண்டில் புலத்திசி நகரிலிருந்து தொடங்கி யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் பூராகவும் 06 வருடங்களாக நடாத்தப்பட்டதன் பின்னர் சிற்சில காரணங்களினால் 1989 ஆம் ஆண்டில் கிராந்துரு கோட்டையில் நடைபெற்ற யொவுன்புர நிகழ்ச்சியுடன் முடிவடைந்தது.

இவ்வாறானதொரு பின்னனியில் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் மாண்புமிகு பிரதமர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் மீண்டும் மாத்தளை நகரில் யொவுன்புர நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படுவது ஒட்டுமொத்த இளைஞர் கழக இளைஞர்களினதும் அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட பாரியதோர் நடவடிக்கையாக நான் காண்பதுடன்,அவ்வாறானதொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக சந்தர்ப்பம் கிடைத்தமையினை நான் பெற்ற ஒரு அதிஷ்டமாகவும் கருதுகின்றேன்.

'கனவினைக் காட்டுவதற்கன்றி வழி காட்டுவதற்காகவே' எனும் தொனிப்பொருள் கூற்றினை மிகவும் வலுப்படுத்திய வண்ணம் சகவாழ்வுடனும்,ஒற்றுமையுடனும்,மற்றும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் தேசிய அபிவிருத்திக்கு வலுவூட்டும் பலம் மற்றும் சக்தி மிகுந்த இளைஞர் சமுதாயம் ஒன்றினைத் தோற்றுவிப்பதற்கு,யொவுன்புர 2016 நிகழ்ச்சித்திட்டம் உறுதுணையாய் அமையும் என்பது எனது எண்ணம்.

சமாதானம்,நட்புறவு,ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி ஆகிய அபிமானத்திற்குரிய தொனிப் பொருளினைத் தத்துவமாகக் கொண்ட இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தினைச் சுற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்துள்ள இளைஞர்களுக்கு யொவுன்புர 2016 நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை வெற்றிகொள்வதற்கான பலமும் தைரியமும் கிடைக்கட்டும் என பிரார்த்தனை செய்கின்றேன்.

இந்தப் பணிக்காக ஊக்கத்தினையும் சக்தியினையும் வழங்கிய கௌரவ பிரதமர் அவர்களுக்கும்,தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் தொடர்பான அரசாங்க அமைச்சர் உட்பட அலுவலர் குழாத்திற்கும்,தேசிய இளைஞர் சேவைகள் சபையின் கௌரவ தலைவர் உட்பட அலுவலர் குழாத்திற்கும்,இலங்கையின் இளைஞர் கழக சம்மேளனத்தின் 2015-2017 தேசிய சபையின் சகல சகோதர சகோதரிகளுக்கும் மற்றும் மேற்படி அலுவலர் குழாத்திற்கும்,சகல இளைஞர் கழக மாவட்ட சபை தலைவர் தலைவிகளுக்கும் மற்றும் மேற்படி யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒன்றினைந்துள்ள சகல இளைஞர் யுவதிகளுக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டபிள்யு.ஏ.சசித லக்மால்,
செயலாளர்,
இலங்கை இளைஞர் கழக சம்மேளனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தேசிய இளைஞர் சேவைகள் சபை இன்றுவரை நான்கு தசாப்த காலமாக பல்வேறுபட்ட இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.அவற்றுள் 1984 ஆம் ஆண்டில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்ட யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.மேற்படி அனுபவத்தினை புதிய இளைஞர் சமுதாயத்திற்கும் பெற்றுத் தரும் நோக்கில் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் 2016.03.30 ஆந்திகதி தம்புள்ளை,சீகிரியா,வான்படை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2016.04.03 ஆந்திகதி வரை நடாத்தப்படும்.

இளைஞர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும்போது இளைஞர் சமுதாயத்தில் நிலவும் பல்வேறுபட்ட தன்மைகளுக்கும் மதிப்பளிக்கும் வகையிலும் மற்றும் பல்வேறுபட்ட தன்மையினைப் பாதுகாக்கும் வகையிலும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தில் 5000 இளைஞர் யுவதிகளை இணைத்துக்கொண்டு இந்நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்படுகின்றது.இந்நிகழ்ச்சித் திட்டம் தேசிய நல்லிணக்கத்தினை தெளிவாக எடுத்துக்காட்டும் ஒரு சந்தர்ப்பமாகும். "இம்முறை யொவுன்புர நோக்கங்கள்" எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் விரிவான நோக்கங்கள் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தக் கைநூலில் 08 பிரதான விடயங்களின் அடிப்படையில் தகவல்கள் உப தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| |
|---|
| 01. நிகழ்ச்சியினை அறிமுகம் செய்தல் |
| 02. அடிப்படை ஏற்பாட்டு நடவடிக்கைகள் |
| 03. முகாம்களின் திடல் செயற்பாடுகள் |
| 04. முகாம்களின் பொது வசதிகள் |
| 05. சிறந்த மாவட்டத்தைத் தெரிவு செய்தல் |
| 06. பொது ஆலோசனைகள் |
| 07. நாளாந்த நேர அட்டவணை |
| 08. விஷேட குறிப்புக்களாக |

இந்நிகழ்ச்சித் திட்டத்தினை திட்டமிடும்போது தேசிய இளைஞர் சேவைகள் சபை மற்றும் நிரல் அமைச்சு, ஏனைய பெரும்பாலான அரச மற்றும் சுயாதீன அமைப்புக்களின் பங்களிப்பு போதியளவு கிடைக்கப்பெற்றுள்ளது.மேலும் இந்நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்புச் செய்யும் தேசிய இளைஞர் சேவைகள் சபையின் சகல அலுவலர்களும் மேற்படி "யொவுன்புர கைநூல்" ஆக்கத்திற்காக தகவல்களை வழங்கி பங்களிப்பினை வழங்கினார்கள்.திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் அலுவலர் குழாமும் இங்கு ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளும் இணைந்து கைநூலினைத் தயாரிப்பதற்காக ஊக்கத்துடன் செயற்பட்டமை பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

அதற்கமைய இந்தக் கைநூலினைத் தயாரிப்பதற்காக பங்களிப்பினை வழங்கிய சகலரையும் நினைவு கூறுவதுடன் கலந்துகொள்ளும் இளைஞர்களாகிய தங்களுக்கு ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாகவும் எளிதான வழிகாட்டல் ஒன்றினை இக்கைநூல் ஊடாக வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

பி.ஜீ.சாந்த விமல் அபேவிக்ரம,

உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்கள் மற்றும் அபிவிருத்தி),

தேசிய இளைஞர் சேவைகள் சபை,

2016.03.09 ஆந்திகதி.

Shanthanysc.@gmail.com

011-3185703



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் மாண்புமிகு பிரதமர் அவர்களின் வாழ்த்துச் செய்தி iii

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவலுவல்கள் கௌரவ இராஜாங்க அமைச்சரின் செய்தி v

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள்அமைச்சுச் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி vii

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி ix

இலங்கை இளைஞர் கழக சம்மேளன செயலாளரின் செய்தி xi

முன்னுரை xiii

1. நிகழ்ச்சி அறிமுகம் 1

**1.1.** யொவுன்புர எண்ணக்கரு மற்றும் நோக்கங்கள் 1

**1.2.** இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியின் நோக்கங்கள் 7

**1.3.** யொவுன்புர ஏற்பாட்டுக் கட்டமைப்பு 8

**1.3.1.** யொவுன்புர நகர சபை 8

**1.3.2** தலைமைக் கடமைப் பொறுப்பு அலுவலர் 11

2. ஆரம்ப ஏற்பாட்டு நடவடிக்கைகள் 12

**2.1.** முன்னோடிக் குழுக்கள் 12

**2.2.** பங்குபற்றுபவர்களைப் பதிவு செய்தல். 13





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2.1. பங்குபற்றுவதற்கான அடையாள அட்டையினை வழங்குதல். 15

2.3. கலந்துகொள்வதற்கான இணைவு 16

!. முன் பிரச்சார நடவடிக்கைகள் 18

மேழ குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைகளினூடாக யொவுன்புர நிகழ்ச்சியின் ஏற்பாடுகளின் ஆரம்ப கட்டம் தொடக்கம் மக்களை அறிவூட்டல். 18

3. முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேச செயற்பாடுகள் 19

3.1. அறிமுகம் 19

3.2. அரச கொள்கைகள் 21

3.2.1. கிராமிய அரசு 21

3.3. கல்வி நிகழ்ச்சிகள் 22

3.4. விளையாட்டு நிகழ்ச்சிகள் 28

3.4.1. நாளாந்த உடல் நல நிகழ்ச்சி 28

3.4.1. வீதி அஞ்சலோட்டப் போட்டி (பெண்/ஆண்) 28

3.4.2. வெளிக்களச் செயற்பாடுகள் வலயம் (OBT) 29

3.4.3. கயிறு இழுத்தல் போட்டிகள் (ஆண்/பெண்) 29

3.4.4. 19 வயதின் கீழ் பெண்கள் மற்றும் 20 வயதின் கீழ் ஆண்கள் ஆகியோர்களுக்கான இளைஞர் சேவைகள் ரூபவாஹினி வொலிபோல் போட்டித் தொடரின் இறுதிப்போட்டிகள் 30

3.4.5. சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் நடாத்தப்படும் பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.5. நுண்கலைப் போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகள் 31
3.6. சிரமதான நிகழ்ச்சிகள் 35
3.7. ஆய்வு மற்றும் கணக்கெடுப்பு நிகழ்ச்சிகள் 38
3.7.1. ஆய்வு நிகழ்ச்சிகள் 38
3.7.2. கணக்கெடுப்பு நிகழ்ச்சி 40
3.8.1. தொழில் முயற்சியாண்மை நிகழ்ச்சிகள் 43
3.8.2. தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் அறிவுருத்தல் நிகழ்ச்சிகள் 45
3.9. விஷேட வலயங்கள் 47
3.9.1. ஊடக வலயம் 47
3.9.2. கல்வி மற்றும் கண்காட்சி வலயம் 50
4. முகாம்களின் பொது வசதிகள் 55
4.1. நீர்ப்பாசன நடவடிக்கைகள் 55
4.2. மின் பாவனை 56
4.3. கூடாரங்கள் 57
4.4. சுகநலன் பேண் நடவடிக்கைகள் 59
4.5. மருத்துவச் சிகிச்சை மற்றும் முதலுதவிகள் 60
5. சிறந்த மாவட்டத்தினைத் தெரிவு செய்தல் 63
6. பொது அறிவுருத்தல்கள் 65
6.1. சிரமதான மற்றும் ஆய்வு நிகழ்ச்சிகளுக்குப் பங்குபற்றுபவர்களுக்கான அறிவுருத்தற்கோவை 66
6.2. பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம் தொடர்பான அறிவுருத்தல்கள் 67



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நாளாந்த நேர அட்டவணை (காலம் இருபத்தி நான்கு மணித்தியாலயங்களுக்கு உட்பட்ட) 72

8. விஷேட குறிப்புக்கள்... 84



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. நிகழ்ச்சி அறிமுகம்

## 1.1. யொவுன்புர எண்ணக்கரு மற்றும் நோக்கங்கள்

இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்போது இளைஞர் யுவதிகளுக்காக சுயாதீன அமைப்பொன்றின் அவசியத்தை அடையாளங் கண்ட தற்போதைய கௌரவ பிரதமர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்கள் கல்வி, இளைஞர் விவகார மற்றும் தொழில்வாய்ப்புக்கள் கௌரவ அமைச்சராக 1979 ஆம் ஆண்டில் இளைஞர் கழக வியாபாரத்தினை ஆரம்பித்து வைத்தார்.

இளைஞர் கழக வியாபாரத்தின் ஊடாக இளைஞர் யுவதிகளுக்கு தலைமைத்துவம் தொடர்பான செயற்பாட்டு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு தமது ஆளுமை விருத்தி,விளையாட்டுக்கள்,கலாச்சார மற்றும் கலை,கல்வி,தொழில் முயற்சியாண்மை,தொழில் சார் பயிற்சிகளுக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது.இவ்வாறு இளைஞர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பரவிச் செல்லும்போது உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்திலும் இளைஞர் யுவதிகள் ஏராளமான எண்ணிக்கையானோர் தேசிய இளைஞர் சேவைகள் சபையினைச் சுற்றி இணைந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் யுவதிகளுக்கு ஒன்றாக இணைந்து தத்தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கும்,பல்வேறு இனத்தவர்கள் அங்கத்துவம் வகிக்கும் இளைஞர் யுவதிகளுக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்கத்தினை விருத்தி செய்வதற்கும் ,அவர்களுக்கிடையில் நட்புறவினையும் மற்றும் ஒற்றுமையினையும் விருத்தி செய்வதற்கும்,வள முகாமைத்துவத்தின் ஊடாக சவால்களை வெற்றி கொள்ளும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும்,ஒழுக்கம் மற்றும் கீழ்ப்படிவு தொடர்பாக சுய புரிந்து ணர்வொன்றினை பெற்றுக்கொள்வதற்கும்,பல்வேறு ஆற்றல்களை விருத்தி செய்துகொள்ளவும் மற்றும் அவற்றினை மதிப்பீடு செய்வதற்கும் ,தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய கொள்கைகளை உருவாக்கும்போது கலந்துரையாடல்களின் மூலம் இளைஞர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கும்,1984 ஆம் ஆண்டில் கல்வி இளைஞர் விவகார மற்றும் தொழில்வாய்ப்புக்கள் கௌரவ அமைச்சர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்களின் எண்ணக்கரு ஒன்றாகிய "யொவுன்புரய" நிகழ்ச்சித்திட்டம் உருவாகியது.1984 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரை முறையே பொலன்னறுவை,குளியாப்பிட்டிய,மாத்தளை,அனுராதபுரம், பண்டாரவளை மற்றும் கிராந்துருகோட்டே ஆகிய யொவுன்புர நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு,1989 ஆம் ஆண்டின் பின்னர் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவது 2016 ஆம் ஆண்டிலாகும்.

அதற்கமைய 2016 யொவுன் புர "எதிர்காலம் தொடங்கிவிட்டது" என்ற தொனிப்பொருளின் கீழ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீகிரியா நகரில் ஆரம்பிக்கப்படுவது இலங்கையின் தற்கால இளைஞர் சமுதாயம் பெற்ற பாரியதோர் வெற்றியாகும்.யொவுன்புர எண்ணக்கருவில் ஏராளமான எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்குகின்றன.இளைஞர்கள் தத்தமது நாளாந்த வாழ்க்கை நடைமுறையிலிருந்து மீண்டு நாட்டின் நாலா பக்கத்திலிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகை தருகின்ற பல்வேறு கலாச்சாரங்களைப் பின்பற்றும் நண்பர்களுடன் அறிமுகமாகி ஓய்வு,பொழுதுபோக்கு,கல்வி, அனுபவங்கள் தொடர்பான விரிவானதொரு அறிவினை மேற்படி யொவுன்புர இனூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.யொவுன்புர நிகழ்ச்சியின் செயற்பாட்டு நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்தல் யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் இளைஞர் யுவதிகளாலேயே ஆகும்.அதற்காக இங்கு மாவட்ட ரீதியான அங்கத்துவத்தின் அடிப்படையில் யொவுன்புர நகர சபையினை நியமித்தல் ஒரு விஷேட பண்பாகக் காணப்படுகின்றது.

யொவுன்புர தேசிய இளைஞர்களின் முகாமொன்றாக ஏற்பாடு செய்யப்படுவதுடன் முகாமொன்றின் யதார்த்தமாகிய குறிப்பிட்டளவான வளத்தினைக்கொண்டு உச்சளவான நலன்களைப் பெற்று வாழும் அனுபவங்களை இது இளைஞர் யுவதிகளுக்கு வழங்கும்.இது முகாம்களின் திறனாகும்.அவ்வாறே யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்கள் இளைஞர் கழக உறுப்பினர்களாவதுடன் அவர்கள் அனைவருக்கும் யொவுன்புர நிகழ்ச்சியில் சிறந்த ஒழுக்கத்துடனும் கீழ்ப்படிவுடனும் தமது செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ளக் கிடைக்கும் சந்தர்ப்பம் தமது வாழ்நாளில் கிடைக்கப்பெறும் ஓர் அரிய வாய்ப்பாகும்.சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் தமது அபிமானம் மிக்க பிம்பத்தினை உலகிற்கு எடுத்துச்சொல்ல இளைஞர் யுவதிகளுக்கு யொவுன்புர நிகழ்ச்சியூடாக பாரியதோர் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

விஷேடமாக கடந்த காலங்களில் நடைபெற்ற யொவுன்புர நிகழ்ச்சிகளிலும் பார்க்க இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியில் நவீன தொழில்நுட்ப உலகில் காணப்படும் சந்தர்ப்பங்களை வெற்றிகொள்வதற்காக கல்வி மற்றும் அறிவினைப் பெற்றுக்கொடுக்கும் கருத்தரங்குகள் / கண்காட்சிகள் / செயற்பாட்டுப் பயிற்சிகள் போன்றவற்றிற்கான சந்தர்ப்பங்கள் ஏராளமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை யொவுன்புர எண்ணக்கருவின் விருத்தியடைந்த ஓர் நிலையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் பொறுப்புக்களை ஏற்க அனுபவங்களையும் பயிற்சிகளையும் பெறவும் யொவுன்புரய நிகழ்ச்சி இளைஞர் யுவதிகளுக்கு அரியதோர் வாய்ப்பாகும்.அவ்வாறே யொவுன்புர நிகழ்ச்சியில் தேசிய அபிவிருத்திக்கான தமது பங்களிப்பின் முக்கியத்துவத்துவம் மற்றும் பெறுமதி தொடர்பான இளைஞர் யுவதிகளின் அறிவினை செயற்பாட்டு நடைமுறைகளினூடாக மேம்படுத்தப்படும். இம்முறை இதனூடாக மேற்கொள்ளப்படும் மர நடுகை மற்றும் பாடசாலைகள் மற்றும் கிராமங்கள் சார் சிரமதானங்கள் என்பவற்றிற்கு இளைஞர்களின் உழைப்பினை ஈடுபடுத்துவதன் மூலமும் மேற்படி அனுபவம் மற்றும் பயிற்சி இளைஞர் யுவதிகளுக்கு கிடைக்கப்பெறும்.அதனூடாக அவர்களுக்குக் கிடைக்கப் பெறும் அபிமானம் மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான உணர்வு நாட்டிற்கு அவசியமானதொரு காரணியாகும்.

நாடொன்றின் இளைஞர்களின் அபிவிருத்தி தொடர்பான கடமைப்பொறுப்பு மேற்படி நிறுவனமொன்றினால் மாத்திரம் நிறைவேற்றப்பட வேண்டிய பணி அல்ல என்பதனையும்,மொத்த இளைஞர் சமுதாயத்தினதும் அபிவிருத்திக்கான பணிகளை நிறைவேற்றும் கடமைப்பொறுப்பிற்கான பங்களிப்பினை சகல நிறுவனங்களும் வழங்க வேண்டும் என்பதனையும் உறுதிப்படுத்துவதற்கு யொவுன்புர நிகழ்ச்சி முக்கியமானதொரு சாட்சியாகும்.மேற்படி யொவுன்புர நிகழ்ச்சியில் இளைஞர் யுவதிகளுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கும்போது இளைஞர் அபிவிருத்திக்கான அரச நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பு என்பவை கண்கூடாகத் தென்படும் வகையிலும் மற்றும் திட உறுதியாகவும் ஊக்கத்துடனும் மேற்படி நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் மற்றும் அரச நிறுவனங்களுக்கிடையில் ஏற்படும் சிறந்த ஒருங்கிணைப்பு ஆகியன யொவுன்புர எண்ணக்கருவினூடாக ஏற்படும் சிறந்ததோர் பெறுபேறாகும்.

யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் பிரதேச மக்களுக்காக யொவுன்புர நிகழச்சியுடன் இணைந்த வகையில் விதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி,வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள்,மின் மற்றும் நீர் வசதிகள் என்பவற்றை வழங்குதவ்,பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளை புனரமைத்தல்,வீடுகளை நிர்மாணித்தல் போன்ற மக்கள் சேவைகளை நிறைவேற்றல் யொவுன்புர நிகழ்ச்சியின் இன்னொரு பக்கமாக அடையாளங் காணலாம்.மேற்படி கடமைப்பொறுப்புக்கள் ஊடாக யொவுன்புர தொடர்பான மக்களின் வரவேற்பு அதிகரிக்கும்.

யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்போது மாவட்ட மட்டத்தில் வசதிகளையும் மற்றும் உணவுகளையும் வழங்குதல்,முகாம்களை அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக தலைமைத்துவத்தினையும் மற்றும் பொறுப்புக்களையும் வகிப்பது பிரதேச மற்றும் மாவட்ட மட்ட இளைஞர்களின் தலைவர்களினாலாகும்.இது பொறுப்புக்களையும் மற்றும் தலைமைத்துவத்தினையும் வகிப்பதற்கும் மற்றும் போட்டித் தன்மையினை விருத்தி செய்வதற்கும் தற்போதைய யொவுன்புர எண்ணக்கருவிலுள்ள மிகச் சிறந்த வாய்ப்பொன்றாகும்.இங்கு அவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள்,பிரச்சினைகள் மற்றும் வெற்றி தோல்விகள் இளைஞர்களின் வாழ்க்கையில் அளப்பரிய பெறுமதி ஒன்றினைச் சேர்க்கின்றது.

வருடாந்தம் யொவுன்புர நிகழ்ச்சி ஒன்று உருவாக்கப்படும்போது இளைஞர் சமுதாயத்தின் மீதும்,இளைஞர் கழக முன்னெடுப்பின் மீதும்,மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் சபை மீதும் நிதமும் நாட்டு மக்களின் கூடிய கவனம் செலுத்தப்படும்.இதுவும் இளைஞர் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ளவர்களை வெற்றி அடையச் செய்வதற்கு உறுதுணையாய் அமைவதுடன் சக்தியொன்றாகவும் அமையும் என்பதுடன் யொவுன்புர எண்ணக்கருவின் சிறந்த பெறுபேறு ஒன்றுமாகும்.விஷேடமாக இம்முறை யொவுன்புர நிகழ்ச்சி,கௌரவ பிரதமரின் எண்ணக்கருவின் அடிப்படையில் பல புதிய விடயங்களை உள்ளடக்கிய வகையில் செயற்படுத்தப்படுவதுடன் மேற்படி நடவடிக்கைகளுக்கான வழிகாட்டலையும் தலைமைத்துவத்தினையும் வழங்கும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் நிரோஷன் பெரேரா அவர்கள் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் சபையின் தலைவர்/பணிப்பாளர் நாயகம் சட்டதரணி டபிள்யு.ஜீ.எஸ்.எரந்திக அவர்களின் தாராளமான உதவியினையும் இங்கு கௌரவ பூர்வமாக நினைவு கூறுகிறேன்.

சுனில் கருணாரத்ன,

பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி).

தேசிய இளைஞர் சேவைகள் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2. இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியின் நோக்கங்கள்

எங்கள் அனைவருக்கும் தனியாள்,குழுக்கள் அல்லது நிறுவன ரீதியான நோக்கங்கள் உள்ளன.மேற்படி யொவுன்புர நிகழ்ச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்வேறு வகையான செயற்பாடுகளின் மூலம் தங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பின் ஊடாக தங்களது தனியாள் மற்றும் குழு ரீதியான நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதன் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன ரீதியான நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

I. தேசிய நல்லிணக்கம் மற்றும் இணக்கப்பாடு பற்றிய புரிந்துணர்வு மற்றும் அனுபவங்கள் என்பவற்றை பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கல்.

II. பரஸ்பர புரிந்துணர்வு விருத்திக்கு உதவும் வகையில் கல்வி,விளையாட்டு,கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்கு போன்ற நிகழ்ச்சிகளில் ஒற்றுமையுடனும் சகவாழ்வுடனும் ஈடுபடும் சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

III. இளைஞர்களின் அபிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாட்டு இளைஞர் யுவதிகளுடன் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொடுத்தல்.

IV. இளைஞர்களின் அபிவிருத்தியில் தகவல் தொழிநுட்பத்தினையும் மற்றும் ஊடகப் பாவனையினையும் விரிவுபடுத்தல்.

V. தேசிய கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கிடையில் கலந்துரையாடலை ஏற்படுத்துவதன் ஊடாக இளைஞர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களையும் மற்றும் முன்மொழிவுகளையும் பெற்றுக்கொள்ளல்.

மேற்படி யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்த செயற்பாடுகளிலும் தங்களது செயலூக்கத்துடனான பங்களிப்பின் மூலம் நிகழ்ச்சியினதும் அவ்வாறே தங்களது வெற்றிக்காகவும் இணைந்தே பிரார்த்திப்போம்.

## 1.3. யொவுன்புர ஏற்பாட்டுக் கட்டமைப்பு

### 1.3.1. யொவுன்புர நகர சபை

"பத்தாயிரம் பேர் கலந்துகொள்வதனால் இது வெறுமனே பங்குபற்றும் வாய்ப்பொன்றாகத் தோன்றினாலும் சரியான பங்களிப்பு என்பது செயற்பாட்டுடன் கூடிய தலைமைத்துவத்தின் ஊடாக பொறுப்புக்களை ஏற்று பங்களிப்புச் செய்வதாகும்..அவ்வாறு பொறுப்புக்களை ஏற்று அவற்றை உரிய முறையில் நிறைவேற்றல் பங்குபற்றும் வாய்ப்பொன்றாவதுடன் இளைஞர் யுவதிகளின் முகாமின் நிருவாக செயற்பாடுகளுக்கும் முழுமையாக பங்குபற்றுதல் வேண்டும்."

மேற்படி உதாரணத்தின் மூலம் எடுத்துக் காட்டப்படுவது என்னவெனில் பங்குபற்றல் எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவத்தினை விளக்குவதாகும்.மேலும் பங்குபற்றல் என்பது வெறுமனே முகாமில் பங்குபற்றல் என்ற வரையறைக்கு உட்படாது அதற்கும் மேல் முகாமின் நிருவாக ரீதியான தீர்மானம் மேற்கொள்ளல் வரை ஆழமாக வேரூன்றிச் செல்லல் வேண்டும் என்பதனை மேற்படி கூற்று சான்று பகர்கிறது.

யொவுன்புரய முகாம்களின் நிருவாகத்திற்காக இளைஞர்களாகிய தங்களுக்கு பங்குபற்றக்கூடிய பிரதான காரணி நகர சபையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. யொவுன்புரய நிருவாக நடவடிக்கைகள் கலந்துகொள்பவர்களினால் நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஒவ்வொரு மாட்டத்திலிருந்தும் இரண்டு நகர சபை உறுப்பினர்களைக்கொண்ட நகர சபை ஒன்றின் ஊடாக மேற்படி நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட உள்ளன. அதற்கமைய நகர சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 52 ஆகும்.
2. நகர சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்போது ஆண், பெண் இரு பாலாரினதும் சம பங்களிப்பு உறுதி செய்யப்படுதல் வேண்டும்.
3. யொவுன்புரய நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் உத்தியோகபூர்வக் கூட்டம் ஒன்றினை நடாத்தி வரவழைத்து உபசரிக்கும் மாவட்டத்திலிருந்து நகர பிதாவினைத் தெரிவு செய்வதுடன் ஏனைய உறுப்பினர்களிலிருந்து பிரதி நகர பிதா மற்றும் ஏனைய அலுவலர் குழாத்தின் 10 உறுப்பினர்களுக்காக தலைமை வகிப்பவர்கள் தெரிவு செய்யப்படுவர்.
4. யொவுன்புர நகர சபையின் நிருவாகப் பிரிவுகள்
   - i பாதுகாப்பு மற்றும் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் பிரிவு
   - ii கல்விமற்றும் ஆளுமை விருத்திப் பிரிவு
   - iii விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்குகள் பிரிவு
   - iv சுகநலன் பேணல் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுப் பிரிவு
   - v உணவுப் பாதுகாப்பு மற்றும் நீர் முகாமைத்துவப் பிரிவு
   - vi இனவேறுபாட்டு ஒருமைப்பாடு, பரஸ்பர நல்லுறவு விருத்தி மற்றும் இணக்கப்படுத்தல் பிரிவு
   - vii சூழல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு
   - viii தொலைத்தொடர்பு மற்றும் ஊடகப் பிரிவு
   - ix கலாச்சார அலுவல்கள் பிரிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

X பெண்கள் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் சித்திரவதையினை ஒழித்தல் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாத்தல் தொடர்பான பிரிவு

5. நகர சபையின் அலுவல்களை கூடியளவு முறைமைப்படுத்தல் மற்றும் நகர சபையில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை அலுவலர்கள் மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதனை எளிதாக்குதல் என்பவற்றிற்காக யொவுன்புர நகர சபைக்கு நகர சபை ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

6. நகர சபையானது ஒவ்வாரு நாளும் மு.ப.6.00 மணி தொடக்கம் 6.30 வரையும் மற்றும் பி.ப.8.00 மணி தொடக்கம் பி.ப.10.00 மணி வரையும் கூடப்படுவதுடன் தேவையான அவசர காலகட்டங்களிலும் கூடப்படலாம்.

7. நகர சபைக் கூட்டங்களின்போது கீழ்வரும் விடயங்கள் / நிலைமைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

   I. நாளாந்த நடவடிக்கைகள் உரிய முறையில் நடைபெற்றுள்ளதா என்பது தொடர்பாகவும் குறைபாடுகள்,மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப் பெறவில்லையாயின் அதற்கான காரணங்களையும் கேட்டறிதல்.

   II. எதிர்வரும் நாட்களில் நிறைவேற்றப்படுவதற்கான திட்டங்கள் தொடர்பான முன் ஏற்பாடு,வள முகாமைத்துவம் மற்றும் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பங்கள் என்பவற்றிற்காக முன்னேற்பாடுகளை மேற்கொள்ளல்.

   III. அந்தந்த பிரிவுகளுக்குரிய பொறுப்புக்கள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராய்தல்.

   IV. அந்தந்த பிரிவுகளின் மூலம் முன்வைக்கப்படும் அறிக்கைகளின் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.3.2 தலைமைக் கடமைப் பொறுப்பு அலுவலர்

வழிகாட்டல் :- சட்டதரணி டபிள்யு.ஜீ.எஸ்.எரந்திக,பணிப்பாளர் யகம்/தலைவர்,தேசிய இளைஞர் சேவைகள் சபை-0715658658

## மேற்பார்வை :-

01.திரு.ரோஹன சேனாரத்ன – பணிப்பாளர் (நிருவாகம்)- 0716832661

02.திருமதி.ரோஷினி ரத்னாயக்க –பணிப்பாளர் (பயிற்சிகள்) - 0714869668

03.திரு.ஜீ.டீ.ரீ.எஸ்.துஷார பெரேரா –பணிப்பாளர் (நிதி)- 0718738832

04.திரு.சுனில் கருணாரத்ன–பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)0718386729

05.திரு.என்.ராஜபக்ஷ - பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) -0776185096

06. திரு.பிரபாத் லியனகே – மா.பணிப்பாளர் –0718045477

07.திரு.ரெஜினோல்ட் ரணசிங்ஹ- மா.பணிப்பாளர்-- 0718578947

08.திரு.எச்.டீ.கீர்த்திரத்ன-உதவிப் பணிப்பாளர் --0777068671

09. திரு.சமன் அபேவர்தன- உதவிப் பணிப்பாளர்--0718425010

10.திரு.பிரியந்த ஜயரத்ன - உதவிப் பணிப்பாளர்-0718098562

இதற்கு மேலதிகமாக,ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பொறுப்பான அலுவலர்கள் தொடர்பான தகவல்களை யொவுன்புர தகவல்கள் காரியாலயத்தின் ஊடாக வழங்குவதுடன் தேவையான சந்தரப்பங்களில் அவர்களுடன் தொடர்புகொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு – விஷேட கருத்திட்டப் பிரிவு,தேசிய இளைஞர் சேவைகள் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. ஆரம்ப ஏற்பாட்டு நடவடிக்கைகள்

## 2.1. முன்னோடிக் குழுக்கள்

01. யொவுன்புர முகாமின் ஆரம்பப் பணிகளை இலகுபடுத்திக்கொள்வது முன்னோடிக் குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கப்பட்டுள்ள இளைஞர்களின் பங்களிப்பு இலக்குகளுக்கு ஏற்ப இளைஞர்களின் பங்களிப்பு தொடர்பாக தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அவை உச்சளவான 15 இற்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

ஒரு மாவட்டத்திலிருந்து இளைஞர் சேவைகள் அலுவலர்கள் இருவர் இதற்காகக் கலந்து கொள்ளவேண்டியதுடன் அவர்கள் வெளிக்கள செயற்பாடுகளை மேற்கொள்ளும் அனுபவமிக்க செயற்திறனுடைய அலுவலர்களாயிருத்தல் வேண்டும்.

02. <u>கடமைப் பொறுப்புக்கள்</u>

I. முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் தமது மாவட்டத்திற்குரிய முகாம்களின் எல்லைகளை அமைத்துக்கொள்ளல்.

II. முகாம்களைத் திட்டமிடல்.

III. கூடாரங்களை நிர்மாணித்தல்.

IV. உணவு சமைத்தலுக்காக சமையலறையினையும் அவ்வாறே உணவு உட்கொள்வதற்கான சாப்பாட்டறையினையும் தயாரிப்பதற்குத் தேவையான சகல வகையான பொருட்களையும் மற்றும் உபகரணங்களையும் கொண்டு வருதல் மற்றும் அவற்றினை நிர்மாணித்தல்.

V. பங்குபற்றுபவர்கள் வருகை தரும்போது அவர்களுக்கான தேநீர் உபசாரத்தினை ஆயத்தம் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. கொண்டு வரப்பட வேண்டிய உபகரணங்கள்
கூடாரங்கள் மற்றும் அதற்குத் தேவையான பொருட்கள் / மேலதிக மடுவங்களை அமைக்கத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள்,உணவு சமைப்பதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள்.
உதா -: மண்வெட்டிகள்,வீச்சு வாள்கள்,கத்திகள்,அளவாங்குகள்,சிறிய ஏணி ஒன்று,கூடையொன்று, கம்புத் துண்டங்கள்,தென்னோலை ஆகியன.

04. முன்னோடிக் குழுக்களினால் கொண்டு வரப்படும் பொருட்கள் தொடர்பான ஆவணம் 02 பிரதிகளில் கொண்டு வரப்படுதல் வேண்டும்.
முதலாவது பிரதி பாதுகாப்புப் பிரிவிடமும்,இரண்டாவது பிரிவு தமது மாவட்டத்திடமும் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

05. இக்குழுவின் சகல நடவடிக்கைகளையும் 2016.03.31 ஆந்திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் அதாவது முகாம்கள் ஆரம்பிக்கு முன்னர் பூர்த்தி செய்தல் வேண்டும்.

06. முன்னோடிக் குழு,முகாம்கள் ஆரம்பிக்கும் தினத்திற்கு 07 நாட்களுக்கு முன் பங்குபற்ற வேண்டியதுடன் தமது மாவட்டத்தின் முகாமைக் கட்டியெழுப்பும் ஆற்றலின் அடிப்படையில் அதற்காகப் பங்குகொள்ள முடியும்.

07. முகாம்களில் கலந்துகொள்ளும் சகலருக்குமாக (முன்னோடிக் குழுக்கள் உட்பட) முகாம்களின் சட்ட விதிகள் ஏற்புடையதாவதுடன் நிறுவாக ஒழுக்கக் கட்டுப்பாட்டினை விட சுய ஒழுக்கக் கட்டுப்பாடு கூடிய விறைதிறனை அளிக்கும்.

## 2.2. பங்குபற்றுபவர்களைப் பதிவு செய்தல்.

யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் இளைஞர் யுவதிகளின் தகவல்களை எந்தவொரு தேவைப்பாட்டிற்காகவும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறைத் தரவுக் கட்டமைப்பொன்றின் மூலம் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1. மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்குகளுக்குரிய எண்ணிக்கைளுக்குச் சம எண்ணிக்கையில் கலந்துகொள்பவர்ளின் எண்ணிக்கையினை பங்குபற்றச்செய்தல் உரிய மாவட்டத்தின் பொறுப்பாகும்.
2. மாட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களைப் பயன்படுத்தி பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கையொப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து அவற்றின் மூன்று பிரதிகளுடன் யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றுதல் வேண்டும்.
3. பங்குபற்றும் அலுவலர்களின் ஆவணம் ஒன்றினை மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
4. யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் சகலருக்கும்,தேசிய இளைஞர் சேவைகள் சபையின் மூலம் கலந்துகொள்பவர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்படுவதுடன் பங்குபற்றுபவர்கள் மேற்படி அடையாள அட்டையினை நிகழ்ச்சி பூராகவும் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.
5. யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் நுழையும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆளடையாள ஆவணம் ஒன்றினைச் சமர்ப்பித்து பங்குபற்றுபவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2.1. பங்குபற்றுவதற்கான அடையாள அட்டையினை வழங்குதல்.

I. பங்குபற்றுபவர்களை பதிவு செய்வதற்காக மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப ஆங்கில மொழியில் உரிய விபரங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

II. கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) அளவான வர்ணப் புகைப்படம் ஒன்றினை எடுத்து உரிய விபரங்களுக்கு முன்னால் ஒட்டுதல்.(உரிய நபரைத் தெளிவாக அடையாளங் காணக்கூடிய புகைப்படமாக இருத்தல் வேண்டும்.)

III. கடவுச் சீட்டு அளவான புகைப்படத்தினை Save பண்ணும் பெயர் (File name) தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை இட்டு Save பண்ணல்.

IV. நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்போது தேசிய அடையாள அட்டையினைக் கட்டாயமாக கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

V. நாளாந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது மற்றும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்திலிருந்து வெளியே செல்லும்போது Barcode Reader ஊடாக கணனிக் கட்டமைப்பிற்குச் சேர்த்தல். (தொழிநுட்ப உதவி வழங்கப்படும்)

VI. உரிய அடையாள அட்டைகளை மாவட்ட காரியாலயங்களின் மூலம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3. கலந்துகொள்வதற்கான இணைவு

கலந்துகொள்ளும் இளைஞர் கழக உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு இளைஞர் யுவதிகளின் முகவர்கள் கலந்துகொள்ளவதற்கான இணைவு கீழே காட்டப்பட்டுள்ளது.

| இளைஞர்களின் பங்களிப்பு | கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| இளைஞர் கழகத்தின் ஆண்/பெண் உறுப்பினர்கள் | 4,900 |
| வெளிநாட்டு இளைஞர் யுவதிகள் | 100 |
| மொத்தம் | 5,000 |

| தொடரிலக்கம் | மாவட்டம் | இளைஞர்களின் பங்களிப்பு |
|---|---|---|
| 01 | கொழும்பு | 130 |
| 02 | நகர இளைஞர் | 60 |
| 03 | கம்பஹா | 260 |
| 04 | களுத்துறை | 225 |
| 05 | காலி | 290 |
| 06 | மாத்தறை | 250 |
| 07 | அம்பாந்தோட்டை | 230 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 08 | கண்டி | 350 |
| 09 | மாத்தளை | 195 |
| 10 | நுவரெலியா | 200 |
| 11 | மொனராகலை | 140 |
| 12 | பதுளை | 250 |
| 13 | கேகாலை | 200 |
| 14 | இரத்தினபுரி | 210 |
| 15 | குருணாகல் | 500 |
| 16 | புத்தளம் | 170 |
| 17 | அநுராதபுரம் | 250 |
| 18 | பொலன்னறுவை | 100 |
| 19 | திருகோணமலை | 100 |
| 20 | மட்டக்களப்பு | 150 |
| 21 | அம்பாறை | 200 |
| 22 | வ்வுனியா | 60 |
| 23 | மன்னார் | 70 |
| 24 | கிளிநொச்சி | 60 |
| 25 | முல்லைத்தீவு | 70 |
| 26 | யாழ்ப்பாணம் | 180 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4. முன் பிரச்சார நடவடிக்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைகளினூடாக யொவுன்புர நிகழ்ச்சியின் ஏற்பாடுகளின் ஆரம்ப கட்டம் தொடக்கம் மக்களை அறிவூட்டல்.

- ஊடகங்களைச் சந்தித்தல் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்.
- இளைஞர் கழக கூட்டங்களில் அறியச் செய்தல்.
- அச்சு ஊடகங்களில் கடிதங்களைப் பிரசுரித்தல்.
- இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக செய்திகளை வெளியிடுதல்.
- இலத்திரனியல் ஊடகங்களின் ஸ்கோர் பார் செய்திகளை வெளியிடுதல்.
- 2016.03.20 ஆந்திகதி முதல் இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக கால அட்டவணை ஒன்றினை முன்வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேச செயற்பாடுகள்

## 3.1. அறிமுகம்

1980 தசாப்தங்கள் பூராகவும் நடைபெற்ற யொவுன்புர நிகழ்ச்சிகளின் உள்ளடக்கத்திற்கோ அல்லது எண்ணைக்கருவிற்கோ எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வகையில் எனினும் 2016 ஆம் தசாப்தத்தில் வாழும் இளைஞர்களின் பங்களிப்பில் இந்த முகாம்களின் நிகழ்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது.இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியில் 2020 அன்றேல் 2030 இனை இலக்காகக்கொண்டு முகாம்களின் மைதான செயற்பாடுகள் 4 பிரதான துறைகளின் அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ளன.

அதாவது ,

### ➢ அரச கொள்கைகள்

வரலாற்றுக் காலந்தொட்டே அரசுகளின் கொள்கைகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன.பல்வகை வேறுபாடுகளுடன் வெற்றிகரமாக செயற்பாடுகளை மேற்கொள்ள அரச கொள்கைகள் உறுதுணையாய் அமைந்துள்ளன.மக்களின் பிர்ச்சினைகள் மற்றும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஏராளமான செயற்பாடுகள் அரச கொள்கைகள் ஆக்கம் என அழைக்கப்படுகின்றது..மேற்படி கொள்கைகளின் நோக்கங்கள் மற்றும் தீர்மானங்களுக்கு ஏற்ப கொள்கைகளில் மாற்றங்கள் காணப்படும்.மேலும் கொள்கைகள் மற்றும் அரசியல் என்பவற்றிற்கு இடையில் தொடர்பு ஒன்று காணப்படும்.அதற்கமைய தற்கால மக்களின் கொள்கைகளின் முக்கியத்துவம் மற்றும் அதன் விடயப்பண்புகள் என்பவை இங்கு கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால பொருளாதாரக் கொள்கையாவது அறிவின் மீது அடித்தளமிடப்பட்ட போட்டித் தன்மையுடைய சந்தைப் பொருளாதாரமாகும். அவ்வாறே ஊழலை ஒழிப்பதனை முதன்மையாகக் கொண்ட நல்லாட்சிக் கோட்பாடுகளை வலுப்படுத்துவதும் முதன்மையான அரச கொள்கை ஒன்றாகும்.வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களுக்குத் தேவையான வகையில் திட்டமிடப்பட்டவாறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைத் தாபித்தல்,அறிவு,பண்பு,சக்தி என்பவற்றைக்கொண்ட மனித நலன்சார் உணர்வுகளை கல்வியினூடாகப் பெற்றுக்கொடுத்தல் முதன்மையான அரச கொள்கையொன்றாகும்.

## ➢ கல்வி நிகழ்ச்சிகள்

மேற்படி முகாமிடல் நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்தும் ஒட்டு மொத்த நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிய இளைஞர் யுவதிகளின் அறிவு,ஆற்றல்கள் மற்றும் எண்ணக்கரு விருத்தியின் மீது போதியளவு கவனம் செலுத்தப்படும்.அதற்குத் தேவையான தகவல்களை வழங்கல்,விரிவுரைகள்,கலந்துரையாடல்கள், கண்காட்சிகள்,போட்டிகள் போன்ற செயற்பாடுகள் இக்கைநூலின் 3.3 கல்வி நிகழ்ச்சிகள் எனும் அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

## ➢ தகவல் தொழிநுட்பம்

மேற்படி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் தொழிநுட்பத்தினை இளைஞர் சமுதாயத்திடம் பிரபல்யப்படுத்துவத்காக பிரதான மூன்று துறைகளினூடாக செயற்படுத்தப்படும்.அதாவது, , Information, ICT & Technology.மேலும் அதற்குப் பிரபல்யமான அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்பினை இதன் கீழ் பெற்றுக்காள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படும்.கைநூல் 3.7 தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சி அத்தியாயத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

- ஊடகங்கள்

யொவுன்புர நிகழ்ச்சி பூராகவும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள் என்பன தொடர்புகொள்ளப்படும்.மேலும் மேற்படி நிறுவனங்களுக்காக நேரடி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் தயாரிப்பு மற்றும் கண்காட்சி நடவடிக்கைகளுக்காகத் தேவையான ஊடக வலயங்களும் நிர்மாணிக்கப்படும்.மேற்படி மொத்த நடவடிக்கைகளின் மூலம் நிகழ்ச்சிகளுக்குத் தேவையான ஊடகத் தழுவலினை பெற்றுக்கொள்வதுடன் ஊடகப் பாவனை தொடர்பான இளைஞர் யுவதிகளின் அறிவு,புரிந்துணர்வு என்பவற்றை விரிவுபடுத்தலும் இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

மேற்படி பிரதான விடயங்கள் ஊடாக மொத்த நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

# 3.2. அரச கொள்கைகள்

## 3.2.1. கிராமிய அரசு

கிராமிய நிகழ்ச்சிகளைத் திட்டமிடல் மற்றும் நெறிப்படுத்தல் என்பவற்றிற்காக கிராமிய அரசுகளின் 2500 அபிவிருத்தி மத்திய நிலையங்கள் தாபிக்கப்படும்.அங்கு 2500 கொத்தனிக் கிராமங்களுக்காக சகல அங்கங்களையும் உள்ளடக்கிய கிராமியச் சந்தை ஒன்று தாபிக்கப்படும்.மத்திய அரசு,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் நிறுவனங்களின் கீழ் ஊருடன் இணைந்த வகையில் நிதி மதிப்பீடொன்று கிடைக்கும்.இதனைச் செயற்படுத்தல் ஊர் மக்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் அரசியல் வாதிகளினதும் மற்றும் அலுவலர்களினதும் ஒத்துழைப்பு மாத்திரம் கிடைக்கப்பெறும்.

கிராமத்தின் சுயாதீன அமைப்புக்களின் தலைவர்களின் பங்களிப்பில் ஏழு அல்லது எட்டு கிராம அலுவலர் பிரிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைக்கப்பட்டு ஒரு கிராமிய அரசாக ஸ்தாபிக்கப்படுவதுடன் அதன் செயலாளராக உத்தியோக பூர்வ அதிகாரத்தில் கிராம அலுவலர் நியமனம் பெறுவார்.அப்பிரதேசத்திற்கு தற்போது இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பொருளாளராக உத்தியோக பூர்வ அதிகாரத்தில் நியமனம் பெறுவார்.

தலைவர் உட்பட ஏனைய பதவிகள் தேர்தலின் மூலம் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படுவதுடன் தற்போது நிலவும் பிரதேச செயலகம் கிராமிய அரசின் செயலகமாக மாறும்.

## 3.3. கல்வி நிகழ்ச்சிகள்



பங்குபற்றும் இளைஞர் யுவதிகளின் அறிவினை விருத்தி செய்தல் இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றும் இளைஞர்களின் அரச கொள்கைகள் தொடர்பான அறிவினை விருத்தி செய்தல் இதன் முதன்மையான தொனிப்பொருளாகும்.

இங்கு கிராமிய அரசுகள்,தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி,சுகாதார மற்றும் பாலியல் கல்வி,மற்றும் சட்டம் மற்றும் சமாதானம் ஆகிய விடயங்களின் மீது முக்கிய கவனம் கோரப்படும்.இங்கு வளவாளர் நிறுவனங்களாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,மேல் மாகாணக் கிராமிய அபிவிருத்தி அமைச்சு,இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம் மற்றும் சிறி ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் என்பன பங்குபற்றும்.

அதற்கமைய 2016.03.31 ஆந்திகதி மு.ப 8.30 மணி தொடக்கம் 2016.04.01 ஆந்திகதி மு.ப. 11.00 மணி வரையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியிலும் மு.ப.8.30 – மு.ப.10.00,மு.ப. 10.30 – பி.ப.12.00,பி.ப.2.00 – பி.ப.3.00,பி.ப.3.30 - பி.ப.4.30 மற்றும் 2016.04.02 ஆந்திகதி மு.ப.8.30 – மு.ப.10.00,மு.ப10.00 – மு.ப.11.00 ஆகிய கால இடைவெளிகளில் விரிவுரைகள் நடாத்தப்படும்.

ஒரு விரிவுரை நிகழ்ச்சிக்காக 400 பேரிற்கான வசதிகள் காணப்படுவதுடன் உரிய விரிவுரைகளுக்காக மாவட்டத்திலிருந்து பங்குபற்றவேண்டிய எண்ணிக்கை செயலாற்றுகை மதிப்பீட்டுப் பிரிவுடன் கலந்துரையாடி அறிவிக்கப்பட்டுள்ளவாறு பங்குபற்றச்செய்தல் வேண்டும்.

## ஆரோக்கியம் மிக்க இளைஞர்களுக்காக பாலியல் கல்வி

இளைஞர்கள் என்போரே நாட்டின் உயிர்நாடியாவர்.ஏனெனில் நாட்டின் சக்தி எனும் உழைப்புப் படையணி கட்டி எழுப்பப்படுவது மேற்படி இளைஞர்களை முன்னனியாக வைத்து என்பதனாலாகும்.எனினும் மேற்படி இளைஞர்களின் பல்வேறுபட்ட உள எண்ணங்களில் வாழ்ந்துகொண்டு மேற்கொள்ளப்படும் சில சில நடவடிக்கைகளினால் அழிவு நிலைக்கு இட்டுச் செல்வதனை தற்கால சமுதாயத்தில் எங்களுக்குக் காணக்கூடியதாக உள்ளது.இங்கு நாம் விஷேடமாகக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுவது பாலியல் கல்வியின் ஊடாக சுகாதார பூர்வமான இளைஞர் சமுதாயம் ஒன்றினை கட்டியெழுப்புவது எவ்வாறு என்பது பற்றியாகும்.

தற்கால சமுதாயத்தில் இளைஞர் பரம்பரை தகாத பாலியல் தொடர்புகள் காரணமாக பல்வேறு வகையான சமூக நோய்களுக்கு உட்பட்டு வருகின்றனர்.இணையத்தளம்,ஏனைய இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படும் தூண்டுதல்கள் காரணமாக புதிய சமுதாயம் சவால்களுக்கு உட்படுவதும் மற்றும் தகாத செயற்பாடுகளுக்கு தூண்டப்படுவதும் தற்காலத்தில் மிக வேகமாக அதிகரித்து வருகின்றது.அவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவி வரும் பயங்கரமான நோயொன்றான எச்.ஐ.வீ. ஆனது, நவீன வைத்திய விஞ்ஞானத்திற்குச் சவாலாக எந்தவித தயக்கமுமின்றி மனித இனத்திற்கு எதிராக மனித இனத்தை வேரோடு அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.உலகெங்கிலும் உள்ள நிபுணத்துவ வைத்தியர்கள் எச்.ஐ.வி நோயிலிருந்து மீறுவதற்கான முறைகளை தேடும் எல்லையில்லாப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோதிலும் இன்று வரை எச்.ஐ.வி நோயினைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்தினை மாத்திரமே கண்டுபிடிக்க அவர்களால் முடிந்துள்ளது.

எச்.ஐ.வி மற்றும் சமூக நோய்கள் தொடர்பாக விஞ்ஞான ரீதியான தெளிவொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பாதுகாப்பு ரீதியான பாலியல் நடத்தை முறைகள் தொடர்பான அறிவினை வழங்குதல் ஆகிய நோக்கங்களுக்காக இளைஞர்களுக்கு பாலியல் கல்வி தொடர்பான அறிவினை இங்கு வழங்குதல் இதன் நோக்கமாகும்.

## இளைர்களிடமிருந்து மதுபானத்தை ஒழிப்போம்.

மதுபானம் மற்றும் போதைவஸ்துக்கள் தற்கால இளைஞர் சமுதாயம் எதிர்நோக்கும் பாரிய சவால் ஒன்றாகும்.ஏனெனில் பாரியதொரு சூறாவளி போல் மேற்படி அழிவு எமது இளைஞர் சமுதாயத்தை பின் தொடர்ந்தே செல்கின்றது.இந்து சமுத்திரத்தின் முத்து என்ற பெயர் பெற்ற இலங்கை தற்போது மதுபானம் மற்றும் போதை வஸ்துக்கள் பாவனையில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது உச்ச நிலையில் இருப்பது அவலத்திற்குரிய ஒரு விடயமாகும்.

நாட்டின் உழைப்புப் படையணியாக அபிமானத்துடன் இருக்க வேண்டிய இளைஞர்கள் வெறுமனே அழிவு நிலைக்குச் செல்லல் அவர்களுக்கு மாத்திரமன்றி நாட்டின் அபிவிருத்திக்கும் நேரடித் தாக்கத்தை விளைவிக்கும்.பல்வேறு வகையான விஷங்களைக்கொண்ட போதைவஸ்துக்கள் மற்றும் மதுபானங்கள் பல்வேறு நாடுகளிலுமுள்ள கட்டத்தல்காரர்கள் ஊடாக இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிற்கு கொண்டு வரப்படுவதன் காரணமாக பல்வேறு சமூகப் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இச்சமுதாய அழிவினை தடுப்பதற்காக முன்னோடியாக இருக்கவேண்டியவர்கள் இளைஞர்களே ஆகையால்,யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றும் இளைஞர்களுக்கு மதுபானங்கள் மற்றும் போதைவஸ்துக்கள் பாவனையால் ஏற்படும் பக்க விளைவுகள் தொடர்பாக சட்டரீதியாகவும் விஞ்ஞான ரீதியாவும் விளக்கமளித்தல் இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

## இளைஞர்களுக்கு சட்டமும் சமாதானமும்

மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகச் சட்டங்கள் தொடர்பாக தற்கால சமூகத்தில் நிலவும் அறிவு மிகச் சொற்பளவு ஆகையினால் பல்வேறு வகையான சட்டப் பிரச்சினைகளுக்கும் மற்றும் ஏராளமான குற்றச்செயல்களுக்கும் சமூகம் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.ஆதலால் மனிதன் சட்டத்தினைப் பாதுகாக்க வேண்டியதற்குப் பதிலாக சட்டத்தை தமது கையிலெடுத்துக் கொண்டு வன்முறையினை விதைத்துக் கொண்டிருக்கிறான்.

மனித உரிமைகள்,சிவில் சமூகக் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் அவ்வாறே சிவில் சமூக சட்டங்கள் தொடர்பாக இளைஞர்களை அறிவூட்டும் காலம் தற்போது எழுந்துள்ளதனால் இளைஞர்களில் சட்டம் மற்றும் சிவில் சமூக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இளைஞர்களை அறிவூட்டும் பணி இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலத்திரனியல் அடையாள அட்டையினை வழங்குதல் தொடர்பாக அறிவூட்டல்

இலங்கைக் குடிமகனா என்பதனையும் மற்றும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும் அடையாள அட்டை பயன்படுத்தப்படுகின்றது.தற்கால வழக்கில் உள்ள அடையாள அட்டைகளில் காணப்படும் பலவீனங்கள் காரணமாக பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான முறைகேடுகள் மற்றும் நபர்கள் சார் ஏராளமான பிரச்சினைகள் எழுந்துள்ளன.அதற்கோர் தீர்வாக இலத்திரனியல் அடையாள அட்டையினை தற்காலத்தில் வெளியிடல் தொடர்பாக அறிவூட்டல் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மனப்பாங்கு விருத்தி தொடர்பாக அறிவூட்டல்

எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்காக இளைஞர்களுக்குச் சாதகமான மனப்பாங்கு விருத்தியினை ஏற்படுத்தும் நோக்கில் சவால்களுக்கு முகங்கொடுத்து வாழ்வினை வெற்றிகொண்ட தொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கை அனுபவங்களை வைத்து அறிவூட்டல் இதன் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

## உள்நாட்டு போர்க்கலை மற்றும் ஆக்கபூர்வத்தன்மை

அங்கம்பொர உடற் பாகங்களினால் மேற்கொள்ளப்படும் சண்டை,செயற்பாடு என அழைக்கப்படும்.அங்கங்கள் என்பது உடலின் பகுதிகளாகும்.அங்கங்கள் சாஸ்திரம் என்பது உடல் தொடர்பான விஞ்ஞானமாகும்.அங்கம் முறையில் உடலின் பலவீனமான இடங்களைத்தேடி அடிக்கும் முறை,முடிச்சுச் சாஸ்திரம்,பாய்தல்,மீளுதல்,குத்துச் சண்டை ஆகியன உடலினால் மேற்கொள்ளப்படும் யுத்தக் கலைக்கான அங்கங்களில் உள்ளடக்கப்படும்.இதற்கு மேலதிகமாக இலங்கம்,மாயா அங்கம்,ஹேவா அங்கம் ஆகிய ஏராளமான உப பகுதிகளைக்கொண்டிருக்கும்.

முன்னைய கால அரச படைகளுக்கு இக்கலைகள் பயிற்றுவிக்கப்பட்டன.அங்கம் ஹரம்ப சண்டை என்பது அங்கம் பொர கலையின் அடிப்படை ரீதியான கற்பித்தலாகும்.வரலாற்றில் குறிப்பிடப்படுவதன்படி அக்கால அரச படைகளுக்கு இப்போர்க் கலைகளைப் பயிற்றுவிக்க பொறுப்பாக இருந்தவர்கள் மருவல்லிய,சுதலிய போர்க்கலை பரம்பரையினராவர்.அவர்களுக்கு உரித்தான அங்கம் மடுவங்களில் இப்பயிற்சி வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.மேற்படி அங்கம் மடுவங்கள் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளைக் கொண்டவை.அதாவது ஹரம்ப மண்டபம் மற்றும் இலங்கம் மடுவம் என்பனவாகும்.ஹரம்ப மண்டபத்தில் அங்கங்கள் ஹரம்ப பயிற்றுவிக்கப்பட்டதுடன் ,இலங்கம் மடுவத்தில் அந்தந்த சாதிகளுக்குரிய நபர்களுக்கு இசை மற்றும் நடனக் கலை பயிற்றுவிக்கப்பட்டது.அங்கங்கள் சாஸ்திரம் தடைப்படுத்தப்பட்டிருந்த கால கட்டத்தில் மேற்படி இலங்கம் மடுவம் யுத்த பயிற்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டது.வெளியிலிருந்து பார்க்கும் ஒருவருக்கு அவர்கள் நடனம் பயில்வது போன்று தென்பட்டாலும் அதனுள்ளே யுத்தப் பயிற்சியும் வழங்கப்பட்டது.இதனாலேயே அங்கங்கள் சாஸ்திரத்தில் சிற்சில அங்கங்கள் நடனத்தினுள் ஊடுரவலாயின .இதன் விளைவொன்றாக புலி நடனம்,கரடி நடனம்,கோலாட்ட நடனம் ஆகிய நடன அங்கங்கள் உருவாகியதுடன் இன்றும் இந்த நடன அங்கங்களில் யுத்த சாயல்கள் தென்படுகின்றன.அவர்கள் ஊர்வலங்களில் தமது கலை ஆற்றல்களை வெளிக்காட்டியதுடன் யுத்த களங்களிலும் பயன்படுத்தினார்கள்.எவ்வாறாயினும் யுத்த களத்தில் யுத்த ஆற்றல்களையும் ஊர்வலங்களில் நடன ஆற்றல்களையும் வெவ்வேறாக வெளிக்காட்டினார்களே அன்றி ஊர்வலங்களில் யுத்த கலைகளை வெளிக்காட்டவோ அல்லது யுத்த ஆடைகளை அணிந்துகொண்டு யுத்த கலைகளை வெளிக்காட்டவோ இல்லை.எனினும் சீனடி எனும் அங்கம் பொர தடை செய்யப்பட்ட கால கட்டத்தில் சீன வியாபாரிகளிடமிருந்து கிடைக்கப்பெற்றதாகக் கருதப்படும் யுத்தக் கலை நுட்பங்கள் ஊர்வலங்களில் வெளிக்காட்டியதாகக் கூறப்படுகின்றது.

எமது பாரம்பரிய யுத்தக்கலையான மேற்படி அங்கம்பொர யுத்தக் கலைகள் தொடர்பாக இளைஞர்களை அறிவூட்டி அதன் பக்கம் ஈர்ப்பொன்றினை ஏற்படுத்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.4. விளையாட்டு நிகழ்ச்சிகள்



2016 ஆம் ஆண்டில் நடாத்தப்படும் யொவுன்புர நிகழ்ச்சியில் யொவுன்புர வாசிகளுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள போட்டி நிகழ்ச்சிகள் முகாமிடல் காலப்பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.அதற்காகத் தகைமைகள் பெற்ற போதிய உடற்றகைமைகளைக் கொண்ட இளைஞர் குழுக்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

### 3.4.1. நாளாந்த உடல் நல நிகழ்ச்சி

ஒவ்வொரு நாளும் உடல்நல நிகழ்ச்சி நடைபெறும் .மேற்படி நிகழ்ச்சிக்காக முகாம்களிலுள்ள சகலரும் பங்குபற்றுதல் வேண்டும்..அதற்குப் பொருத்தமான விளையாட்டுகளுக்கான ஆடைகளைக்கொண்டுவருதல் வேண்டும்.

### 3.4.1. வீதி அஞ்சலோட்டப் போட்டி (பெண்/ஆண்)

முகாமை அண்டிய 10 கிலோ மீற்றர்கள் தூர அளவினைக்கொண்ட மினி மரதன் அஞ்சலோட்டப் போட்டியொன்றாக நடாத்துவதற்கு இப்போட்டி திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்காக போதிய உடற்றகைமை கொண்ட 10பேர்களை உள்ளடக்கிய பெண்கள் மற்றும் ஆண்கள் இரு குழுக்களை ஆயத்தமாக்க வேண்டியதுடன் ஒரு வீரர் அல்லது வீராங்கணை ஒரு கிலோ மீற்றர் தூர அளவு ஓட்டத்தில் ஈடுபட வேண்டும்.பங்குபற்றுபவர்கள் வைத்தியப் பரிசோதனை அறிக்கை ஒன்றினையும் கொண்டு வருதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.4.2. வெளிக்களச் செயற்பாடுகள் வலயம் (OBT)

முகாமில் தரிக்கும் வாழ்வில் கிடைக்கும் ஓய்வினை பயனுள்ள விதத்திலும் தமது விருப்பத்திற்கேற்ற வகையிலும் கழிப்பதற்காக விஷேடமானதும் புதுமையானதுமான செயற்பாடுகளைக் கொண்ட வலயம் ஒன்றும் பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் சிலவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.அதற்காக ஆர்வமுள்ள நீங்கள் தங்களது மாவட்டத்தின் உரிய எண்ணிக்கையான இளைஞர்கள் உரிய தினங்களில் உரிய நேரத்திற்கு வருகை தருவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.மேலும் இளைஞர் யுவதிகள் பொருத்தமான ஆடைகளையும் கொண்டுவருதல் வேண்டும்.

## 3.4.3. கயிறு இழுத்தல் போட்டிகள் (ஆண்/பெண்)

முகாமில் தரிக்கும் காலப்பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வகையில் கயிறு இழுத்தல் போட்டிகள் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் நடாத்தப்படும்.அதற்காக வீரர்கள் மற்றும் வீராங்கனைகளாக 10 பேர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வகையில் இரு குழுக்களை ஆயத்தமாக்கி முகாமில் பங்குபற்றச்செய்தல் வேண்டும்.ஆண்கள் போட்டியின் நிறையின் அளவு 640 கி.கிராம் ஆவதுடன் பெண்களின் நிறையின் அளவு 560 கி.கிராம்களும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.4.4. 19 வயதின் கீழ் பெண்கள் மற்றும் 20 வயதின் கீழ் ஆண்கள் ஆகியோர்களுக்கான இளைஞர் சேவைகள் ரூபவாஹினி வொலிபோல் போட்டித் தொடரின் இறுதிப்போட்டிகள்

19 வயதின் கீழ் பெண்கள் மற்றும் 20 வயதின் கீழ் ஆண்கள் ஆகியோர்களுக்கான இளைஞர் சேவைகள் ரூபவாஹினி வொலிபோல் போட்டித் தொடரின் இறுதிப்போட்டிகள் முகாமில் தரிக்கும் காலப்பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### 3.4.5. சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் நடாத்தப்படும் பொழுதுபோக்கு விளையாட்டுக்கள்

சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொழுதுபோக்கு விளையாட்டுக்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். இதற்காக தேவையான சந்தரப்பங்களில் அறிவித்தல்கள் மூலம் அறியத்தரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.5. நுண்கலைப் போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகள்

<u>போட்டி நிகழ்ச்சிகள்</u>

i.யொவுன்புர நிகபழச்சியின் சிறந்த பாடகன் மற்றும சிறந்த பாடகி (சிங்கள் மற்றும் தமிழ்)

ii.யொவுன்புர அழகன் மற்றும் அழகி

iii.யொவுன்புர சிறந்த நடனம் (புது ஆக்கங்கள் இணைந்த)

பாடல் போட்டியில் திறமை காட்டும் 01 நபருக்கு யொவுன்புர கண்காட்சி நிகழ்ச்சிகள் நடைபெறும் மேடையில் பாடுவதற்குச் சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

இசை விருந்து நிகழச்சி

பரிசுகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<u>போட்டி நிபந்தனைகள்</u>

பாட்டுப்போட்டிக்காக ஒரு மாவட்டத்திலிருந்து பெயரிட முடியுமான இளைஞர்களின் எண்ணிக்கை 05 ஆகும்.(தமிழ் மற்றும் சிங்களம் உட்படும் வகையில்)

நடனத்திற்கானக ஒரு மாவட்டத்திலிருந்து பெயரிட முடியுமான இளைஞர்களின் எண்ணிக்கை 05 ஆகும் (புது ஆக்கங்களுடன்)

இளைஞர் அழகன் மற்றும் அழகிப் போட்டிக்காக ஒரு மாவட்டத்திலிருந்து பெயரிட முடியுமான இளைஞர்களின் எண்ணிக்கை 04 ஆகும் (ஆண்கள் -02,பெண்கள்-02)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு போட்டியாளரும் 16-29 வயதிற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

<u>யொவுன் புர பாடகன் மற்றும் பாடகி</u>

பாட்டுப்பாடல் தொடர்பான ஆர்வமும் திறமையுமுள்ள இளைஞர் யுவதிகளை சிரேஷ்ட நடுவர் குழுவொன்றின் முன்னிலையில் 2016 யொவுன்புர பாடகன் மற்றும் யொவுன்புர பாடகியாக கௌரவித்தல்.

தகைமைகள் -பாடல் தொடர்பான ஆர்வம் மற்றும் ஆற்றல்

முன்வைத்தல்– விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள இளைஞர் யுவதிகளுக்காக மட்டும்

நடுவர்கள் குழு – சிரேஷ்ட பாடகர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் மூன்று பேர்

முன்வைக்கப்பட வேண்டிய பாடல்கள் மற்றும் எண்ணிக்கைகள் - 03 பிரபல பாடல்களைப் பாடுவதற்கான ஆயத்தத்துடன் வருதல் வேண்டும்.

பரீட்சிப்பு செய்தல் - தாளம்,சுருதி அலங்காரத்திற்கேற்ப பாடுதல்

மற்றவர்களைக் கவரும் விதம்

இலவாகவும்,ஆயத்தத்துடனும் முன்வைக்கும் ஆற்றல்

இசை – கலாச்சாரப் பிரிவின் மூலம் வழங்கப்படும்.

<u>நடனப் போட்டி</u>

முன்வைத்தல் மற்றும் போட்டி விதிகள்

விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள குழுக்களுக்கு மாத்திரமே.

**புது ஆக்கங்கள் (இணைந்த) –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கத்திற்கான நேரம் – நிமி 0.3 – 0.5 இற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆக்கத்தினை நேரடியாகவோ அல்லது ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசை வாத்தியத்திற்கு ஏற்பவோ முன்வைக்க முடியும்.
நேரடியாகவோ அல்லது ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசை வாத்தியத்திற்கு ஏற்பவோ முன்வைக்கப்படின் அதற்குத் தேவையான இருவட்டு (CD) ,பொருட்கள்,பண்டங்கள், நடனத்திற்கான ஆடை அணிகலன்களை தாமே கொண்டுவருதல் வேண்டும்.

## யொவுன்புர அழகன் மற்றும் அழகி

நாடு பூராகவும் பரவிக் காணப்படும் அழகான உடல் உருவ அமைப்பு பற்றிய ஆர்வமுள்ள அழகிகள் மற்றும் கம்பீரமான தோற்றமும் ஆளுமையுமுள்ள அழகர்களையும் அழகிகளையும் சிரேஷ்ட நடுவர்கள் முன்னிலையில் மதிப்பிட்டு கிறீடம் அணிவித்தல்.
தேவையான ஆடை அணிகலன்களை தாமே கொண்டு வருதல் வேண்டும்.(அழகி – ஒசரி / அழகன் – தேசிய ஆடை)
நடுவர்கள் குழு - அழகு ஒப்பனைத் துறையில் சிரேஷ்டர்களான மூவரை நடுவர்களாக உள்ளடக்கியது.

| | அலுவலக உபயோகத்திற்கு | |
|---|---|---|
| **யொவுன்புர கலாச்சார நிகழ்ச்சிகள்**<br>**விண்ணப்பப் படிவம்** | | |
| **போட்டி நிகழ்ச்சிகள்** | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| யொவுன்புர சிறந்த பாடல் (சிங்களம்) | |
| யொவுன்புர சிறந்த பாடல் (தமிழ்) | |
| யொவுன்புர – **அழகன்** | |
| **யொவுன்புர – அழகி** | |
| **யொவுன்புர – சிறந்த நடனம்** | |

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பதாரியின் பெயர் | |
| 2 | முகவரி | |
| 3 | பிறந்த திகதி | |
| 4 | வயது | |
| 5 | அடையாள அட்டை இலக்கம் | |
| 6 | மாவட்டம் | |
| 7 | பிரதேச செயலாளர் பிரிவு | |
| 8 | இளைஞர் கழகம் | |
| 9 | தொலைபேசி இலக்கம் | |

மேற்படி தகவல்கள் யாவும் சரியானது எனவும் மற்றும் உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

| | |
|---|---|
| விண்ணப்பதாரியின் கையொப்பம் | ..................... |

மேற்படி தகவல்கள் யாவும் சரியானது எனவும் மற்றும் உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

| | |
|---|---|
| இளைஞர் சேவைகள் அலுவலர் (........................) | மாவட்ட இளைஞர் சேவைகள் அலுவலர் (.......................) |

<u>*கலாச்சாரக் கண்காட்சி நிகழ்ச்சிகளை முன்வைத்தல்.(இசை/நடனம்/வீதி நாடகம்)*</u>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மார்ச் 30 ஆந்திகதி இரவு இராணுவப்படை வீரர்களின் இசைக் குழுவினால் நடாத்தப்படும் பொன் மாலைப் பொழுது மற்றும் நடன நிகழ்ச்சி
- மார்ச் 31 ஆந்திகதி இரவு வான் படை வீரர்களின் இசைக் குழுவினால் நடாத்தப்படும் பொன் மாலைப் பொழுது மற்றும் நடன நிகழ்ச்சி
- மார்ச் 31 ஆந்திகதி தம்புள்ளை நகரினைத்தழுவும் வகையிலும் மற்றும் மார்ச் 31,ஏப்ரல் 1,2 யொவுன்புர வீதி நாடக கண்காட்சி நிகழ்ச்சியினை நடாத்தல்.
- ஏப்ரல் 01 ஆந்திகதி இரவு கடற் படை வீரர்களின் இசைக் குழுவினால் நடாத்தப்படும் பொன் மாலைப் பொழுது மற்றும் நடன நிகழ்ச்சி
- ஏப்ரல் 02 ஆந்திகதி இரவு தேசிய இளைஞர் சேவைகள் சபையின் யூத் எக்ஸ்ட்ரீம் இசைக் குழுவினால் நடாத்தப்படும் பொன் மாலைப் பொழுது மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் சபையின் நடனக் குழுவினால் முன்வைக்கப்படும் நடன நிகழ்ச்சி

## 3.6. சிரமதான நிகழ்ச்சிகள்

2016.03.31 மற்றும் 2016.04.01 ஆகிய தினங்களில் மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப.12.30 மணி வரை 06 இடங்களில் சிரமதான நிகழ்ச்சிகள் நடைபெறும்.அதாவது.

- அரச வைத்தியசாலை - சீகிரியா
- திகம்பத்தஹ மகா வித்தியாலயம் - திகம்பத்தஹ
- சீகிரியா மகா வித்தியாலயம் - சீகிரியா
- கிம்பிஸ்ஸ மகா வித்தியாலயம் - கிம்பிஸ்ஸ
- பல்வெஹெர வித்தியாலயம் – பல்வெஹெர
- தம்புள்ளை மகா வித்தியாலயம் -தம்புள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. ஒரு மாவட்டத்தலிருந்து கலந்துகொள்ளும் விகிதாசாரத்திற்கு ஏற்ப 06 குழுக்கள் இதில் கலந்துகொள்ளும்.இளைஞர்கள் குழுக்களை உரிய இடத்தலிருந்து வெளியேற்றி அனுப்புவதற்காக ஒரு அலுவலர் நியமிக்கப்படுவார்.மு.ப.8.00 மணிக்கு முகாம் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்திலிருந்து வெளியேறி சிரமதானம் நடைபெறும் இடத்திற்கு செல்வதற்காக ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.

II. ஒவ்வொரு சிரமதான குழுவிற்கும் ஆகக்கூடியது 100 பேர்களாவது இருக்கவேண்டியதுடன் அந்தந்த குழுக்களுக்கான தலைவர்களைக்கொண்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.சிரமதான நிகழ்ச்சிகளுக்காக வெளியே செல்லும் குழு சிரமதானம் நிறைவடைந்ததும் முகாமிற்கு வந்து சமூக பொருளாதார அறிக்கை ஒன்றினை மறுநாள் மு.ப.10.00 மணிக்கு முன் செயலாளர் அலுவலகத்திற்கு வழங்குதல் வேண்டும்.

III. ஒவ்வொரு சிரமதான நிகழ்ச்சியும் தம்புள்ளை பிரதேச செயலாளரினால் அடையாளங் காணப்பட்டு சுயாதீன அமைப்புக்கள் மற்றும் ஊர்த் தலைவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிரமதான நிகழ்ச்சிக்கும் மேற்படி கடமைப் பொறுப்பினைக் கொண்ட இளைஞர் சேவைகள் அலுவலரின் வழிகாட்டல் கிடைக்கும்.

IV. சிரமதான நிகழ்ச்சிக்காகப் பங்குபற்றும் குழுக்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் கையொப்பம் இடப்பட்டு குழுக்களின் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.சிரமதான நடவடிக்கைகள் முற்றுப் பெற்றதன் பின்னர் குழுக்களிலுள்ள சகலரும் மீண்டும் முகாமிற்கு சமூகமளித்தமை தொடர்பாக குழுக்களின் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.சிரமதான நடவடிக்கைகள் முற்றுப்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.ப.1.00 மணிக்கு மீண்டும் முகாம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு வருகை தருவதுடன் சகல உறுப்பினர்களும் முகாமிற்கு வருகை தந்தமை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் பி.ப.2.00 மணிக்கு முன்னர் செயலாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.

V. சிரமதானக் குழுக்களை உரிய நேரத்தில் சிரமதான நிகழ்ச்சிக்காக வெளியேற்றுவதற்கும் மற்றும் உரிய நேரத்தில் மீண்டும் அழைத்துக்கொள்ளவும் உரிய அலுவலர்களும் மற்றும் தலைவர்களும் வழி வகை செய்தல் வேண்டும்.

VI. மீண்டும் முகாமிற்கு சமூகமளிக்கும் சகலரும் யொவுன்புர பாதுகாப்புக் குழுவின் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படுவர்.

VII. சிரமதான நிகழ்ச்சி எவ்வாறாயினும் யொவுன்புர நிகழ்வின் கௌரவத்தினைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.இளைஞர்களின் நட்புறவு,ஒழுக்கம்,பொறுமை,வலுவான தன்மை என்பவற்றினைக் எடுத்துக் காட்டும் முக்கிய ஓர் சந்தர்ப்பமாக இச்சிரமதான நிகழ்ச்சியினை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

VIII. யொவுன்புர நடைபெறும் பிரதேசத்தில் இராணுவப் படையினரினால் 5000 எழுமிச்சைக் கன்றுகள் மற்றும் தோடம் பழக் கன்றுகள் 2016.03.31 ஆந்திகதி மற்றும் 2016.04.01 ஆந்திகதி ஆகிய இரு தினங்களிலும் நடுவதற்குத் திட்டமிடப்பட்டள்ளது.

அதற்கமைய கன்றுகளை நடும் நிகழ்ச்சிக்குத் தேவையான கன்றுகளையும் மற்றும் ஆயுதங்களையும் விவசாயத் திணைக்களம் வழய்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமதான நிகழ்ச்சிக்காக பங்குபற்றும் எண்ணிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்தந்த மாவட்டங்கள் பங்குபற்ற வேண்டிய இடங்கள் விவசாயப் பண்ணைகள் அபிவிருத்தி உதவிப் பணிப்பாளரினால் பெற்றுத் தரப்படும்.

## 3.7. ஆய்வு மற்றும் கணக்கெடுப்பு நிகழ்ச்சிகள்

### 3.7.1. ஆய்வு நிகழ்ச்சிகள்

i. ஆய்வு நிகழ்ச்சிகளுக்காக ஒரு நாளைக்கு 1200 வீதம் இரண்டு நாட்களுக்கு 2400 வீதம் இளைஞர் யுவதிகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.இதற்காக ஒரு மாவட்டத்திலிருந்து பங்குபற்றப்படவேண்டிய எண்ணிக்கை வழங்கப்பட்டுள்ளது.

ii.யொவுன்புர நிகழ்ச்சியில் இரண்டாவது நாள் அதாவது 2016.03.31 ஆந்திகதி முதல் இரண்டு நாட்கள் ஆய்வு நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படும்.04 இடங்களில் மேற்படி ஆய்வுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும்.அதாவது,

1. தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம்,தம்புள்ளை ரஜ மகா விகாரை மற்றும் தம்புள்ளை நூதனசாலை
2. சீகிரியா
3. சீ.ஐ.சி.விவசாயப் பண்ணை (CIC Farm)
4. பெல்வெஹெர விவசாயக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii.தலைவர் உட்பட பல்வேறு குழுக்களாக பங்குபற்றுவதுடன் இதற்காக இரு அலுவலர்கள் வீதம் ஈடுபடுத்தி வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவம் வழங்கப்படும்.

iv.உரிய இடங்களில் ஆய்வினை மேற்கொண்டு மேற்படி இடத்தில் பொருளாதார மற்றும் சமூக கோலங்கள்,சூழல் மற்றும் பாதுகாப்பு முறைகள்,விவசாயப் பயிர்ச் செய்கைகள்,வரலாற்று மற்றும் கலாச்சாரக் கோலம் மற்றும் தொல்பொருளியல் விஞ்ஞான முக்கியத்துவங்கள் போன்ற இடங்கள் தொடர்பாக முக்கிய விடயங்களை ஆய்வு செய்தல் வேண்டும்.இவ்விடத்தை ஆய்வு செய்வதற்காக இடங்களுடன் கூடிய வரைபடம் ஒன்று மற்றும் தேவையான தகவல்கள் என்பன வழங்கப்படும்.

v.ஒவ்வொரு குழுவும் ஆய்வு அறிக்கை ஒன்றினை மறுநாள் மு.ப.10.00 மணிக்கு முன்னர் யொவுன்புர செயலாளர்அலுவலகத்திற்கு வழங்குதல் வேண்டும்.ஆதலால் குழுவில் ,

- அறிக்கையிடுவதற்காக
- வழிகாட்டலுக்காக
- ஒழுக்கம் தொடர்பாக
- பொது மக்கள் தொடர்பாடலுக்காக

குழுக்களை நியமித்துக்கொள்ளல் வேண்டும்.

vi.ஒவ்வொரு குழுவிற்கும் தேவையான நீர் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளையும் வழங்குதல் வேண்டும்.

vii.எந்த நேரமும் யொவுன்புர நிகழ்ச்சியின் கௌரவத்தினைப் பாதுகாக்கும் வகையில் ஒழுக்கமாக நடத்தைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.அதற்காக எப்போதும் குழு ஒன்றுடன் கண்காணிப்புக்குழு ஒன்றும் இருப்பதனை சகல உறுப்பினர்களும் மனதில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii.முகாமிலிருந்து வெளியேறும் முன் குழுக்களின் தலைவர் உறுப்பினர் இலக்கத்துடனான குழுவின் பட்டியல் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.மேற்படி பட்டியல் குழுக்களுக்குப்பொறுப்பான அதிகாரியின் கையொப்பத்துடன் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

ix.மீண்டும் முகாமிற்கு வரும்போது மேற்படி பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்த்து சகல உறுப்பினர்களும் முகாமிற்கு சமூகமளித்தமை தொடர்பாக உறுதிப்படுத்தல் வேண்டும்.அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பட்டியலை இரு மணித்தியாலங்களுக்குள் யொவுன்புர செயலாளர்அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். ஆய்வில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கை ஏற்கன்வே வழங்கப்பட்டுள்ளதுடன் அந்தந்த மாவட்டங்கள் பங்குபற்றவேண்டிய இடங்கள் விவசாயப் பண்ணைகள் அபிவிருத்தி உதவிப் பணிப்பாளரினால் வழங்கப்படும்.

## 3.7.2. கணக்கெடுப்பு நிகழ்ச்சி

தேசிய இளைஞர் சேவைகள் சபையின் 2016 – 2020 கூட்டிணைந்த திட்டத்தினைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் வளவாளர் பங்களிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.அதற்காக இளைஞர்களினதும்,முதியோர்களினதும் மற்றும் அலுவலர்களினதும் கருத்துக்களை பல்வேறு முறைகளிலும் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.கணக்கெடுப்பினை மேற்கொள்ளல் அதன் ஒரு நிகழ்ச்சியாகும். யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றுபவர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளல் மேற்படி கணக்கெடுப்பின் ஒரு நிகழ்ச்சியாகும்.முகாமில் பங்குபற்றும் இளைஞர் யுவதிகளிடம் கீழ் வரும் விடயங்கள் தொடர்பான தகவல்களைப்பெற்றுக்கொள்ளல் அதன் ஒரு கட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 01 - தேசிய இளைஞர் சேவைகள் சபையானது எதிர்வரும் ஐந்து வருடங்களில் எவ்வாறான நிறுவனமாக செயற்பட வேண்டும்? என்பது தொடர்பாக கணக்கெடுப்பின் மூலம் தகவல் ளைத் திரட்டிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.அதற்கமைய,

I. தனிப்பட்ட ரீதியில் பூர்த்தி செய்யவேண்டிய கணக்கெடுப்புப் பத்திரம் - முதலில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்படும் கணக்கெடுப்புப் பத்திரத்தின் மூலம் தனிப்பட்ட முறையில் தமது கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்.(வெளிநாட்டு இளைஞர்களின் முகவர்களுக்கான கணக்கெடுப்புப் பத்திரம் ஆங்கில மொழியில் முகாம் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் திட்டமிடல்கள் மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் வழங்கப்படவுள்ளது.)முகாமிற்கு சமூகமளிக்க முன் மேற்படி கணக்கெடுப்புப் பத்திரத்தினை மாவட்ட அலுவலகத்திடம் வழங்குவதோடு முகாமிற்கு வரும்போது இவற்றைப் பூர்த்தி செய்து தமக்குப் பொறுப்பான இளைஞர் சேவைகள் அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

தனிப்பட்ட முறையில் பூர்த்தி செய்துகொண்டு வரப்படும் மேற்படி கணக்கெடுப்புப் பத்திரங்களை பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு கட்டாகச்சேர்த்து (இளைஞர் சேவைகள் அலுவலர்),உரிய மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் ஒன்றாகச் சேர்த்து (மாவட்ட உதவிப் பணிப்பாளரினால் பெயரிடப்பட்ட ஒருவர்) ஒரு கட்டாகப் பொதி செய்தல் (5000 கணக்கெடுப்புப் பத்திரங்கள்)

II. பிரதேச செயலாளர் பிரிவிற்குரிய குழு பூர்த்தி செய்யவேண்டிய கணக்கெடுப்புப் பத்திரம் - ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து பங்குபற்றும் சகலரும் ஒரு குழுவாக ஒரே படிவத்தைப் பூர்த்தி செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்.அதற்காக இலகுவான சந்தர்ப்பம் ஒன்றினை (2016.03.31 இலிருந்து 2016.04.02 ) பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும்.இது யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலேயே மேற்கொள்ளப்படும்.இதனைப்பூர்த்தி செய்து தமது மாட்ட உதவிப் பணிப்பாளரினால் பெயர் குறிப்பிடப்பட்ட அலுவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

- பிரதேச செயலாளர் பிரிவிற்குரிய குழுவின் மேற்படி கணக்கெடுப்புப் பத்திரம் மாவட்ட உதவிப் பணிப்பாளரினால் பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலர்களினால் ஒன்றுசேர்த்து ஒரு மாவட்டத்தை ஒரு கட்டாகப் பொதி செய்தல் வேண்டும்.( கணக்கெடுப்புப் பத்திரங்கள் 332) – (2016.03.31 ஆந்திகதி முதல் 2016.04.02 ஆந்திகதி வரை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்)

கூட்டிணைந்த திட்டத்திற்காக கணக்கெடுப்புத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும்போது பயிற்சிகளுக்காகச் சமூகமளித்த இளைஞர் சேவைகள் அலுவலர்கள் இதற்காக விஷேட ஒத்துழைப்பு ஒன்றினை தமது உதவிப் பணிப்பாளரிற்கு வழங்குவார்கள்.மேலும் மாவட்டத்திற்குரிய எண்ணிக்கையினைக் கொண்ட கணக்கெடுப்புப் பத்திரங்களை சரியான முறையில் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளையும் மற்றும் அறிவுருத்தல்களையும் வழங்கல் மேற்படி இளைஞர் சேவைகள் அலுவலர்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும்போது இளைஞர்களுக்கு சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தரப்பங்களை வழங்குதல் வேண்டும்.ஒவ்வொரு மாவட்டத்திற்குரிய கணக்கெடுப்புப் பத்திரங்களின் எண்ணிக்கை,மாதிரிப் படிவம் மற்றும் ஏனைய பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை 2016.03.20 ஆந்திகதிக்கு முன்னர் மாவட்டத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

- இளைஞர்களின் கருத்துக்களை சுதந்திரமாக முன்வைப்பதற்குச் சந்தரப்பம் வழங்கல் வேண்டும்.

- கணக்கெடுப்பிற்த் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை திட்டமிடல்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான உதவிப் பணிப்பாளர் மேற்கொள்வார்.
- திட்டமிடல்கள் மற்றும் அபிவிருத்தி பிரிவின் முகவர்கள் குழுவொன்று முகாம் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் முழு நேரமும் இதற்காக தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

## 3.8. தொழில் முயற்சியாண்மை,வழிகாட்டல் மற்றும் அறிவுருத்தல் நிகழ்ச்சிகள்

### 3.8.1. தொழில் முயற்சியாண்மை நிகழ்ச்சிகள்

இங்கு பிரதானமாக இளைஞர் யுவதிகளின் தொழில்முயற்சி அபிவிருத்திக்குத் தேவையான தகவல்களை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.

- 15-35 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு நிஸ்கோ மாவட்ட இளைஞர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்புரிமையினை வழங்குதல்.
- சுய தொழில்கள் தொடர்பாகவும் மற்றும் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஆலோசனைச் சேவைகளையும் மற்றும் தேவையான தகவல்களையும் வழங்குதல்,நிதி நிறுவனங்களை அறிமுகம் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொழில் முயற்சியாண்மை பயிற்சி நிகழ்ச்சிகளுக்காகப் பதிவு செய்தல்.

- ஏற்கனவே வியாபாரங்களை ஆரம்பித்துள்ள வியாபாரிகளுக்காக மேற்கொள்ளப்படும் மாவட்ட வியாபாரிகளின் குழாமிற்காகப் பதிவு செய்தல்.
- வியாபாரத்துறையின் பல்வேறு பிரிவுகளுக்காக பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்ப வழிமுறைகள் மற்றும் உபகரணங்கள் பாவனை தொடர்பாக தகவல்களையும் மற்றும் அறிவினையும் வழங்கல்.
- இளைஞர் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளையும் மற்றும் சேவைகளையும் விற்பனை செய்வதற்கான சந்தை வசதிகளை ச் செய்து கொடுத்தல்.

யொவுன்புர நிகழ்ச்சியை அண்டிய சந்தையில் **(Mini Market )** யொவுன்புர மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள வசதிகள்

- மீன் இறைச்சி / முட்டை / கருவாடு
- காய்கறி வகைகள்

- ஏனைய நுகர்வுப் பொருட்கள் (அரிசி,உலர் உணவுகள்,சவர்க்காரங்கள்,பல் மருந்துகள் ,தேவையான முன் செலுத்துகை தொலைபேசி கார்ட் அட்டைகள்ஆகியன )
- வர்ண ஆபரணங்கள் மற்றும் பரிசுப்பொருட்கள்
- கைப்பணி உற்பத்திகள்
- பல்வேறு வகையான உணவுகள் மற்றும் பான வகைகள்
- ஆடை அணி வகைகள் மற்றும் பாதணி வகைகள்
- ஒப்பனைப்பொருட்கள் மற்றும் பண்டங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.8.2. தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் அறிவுருத்தல் நிகழ்ச்சிகள்

யொவுன்புர நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் தொழில் வாய்ப்புச் சந்தை,தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் ஆலோசனை சேவைகள் நிகழ்ச்சி என்பன நடைமுறைப்படுத்தப்படும்,அதற்காக,

1. தொழில் வாய்ப்புச் சந்தைக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தமது சான்றிதழ் பத்திரங்களை கொண்டு வருதல் வேண்டும்.சான்றிதழ் பத்திரங்களைக்கொண்டு வரும்போது மேற்படி சான்றிதழ்களை File Folder ஒன்றில் வரிசைக் கிரமமாக வைத்து Clear Bag ஒன்றில் இட்டு நீரிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
2. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பொருத்தமான ஆடை அணிகலன்களை பங்குபற்றுபவர்கள் கொண்டு வருதல்வேண்டும்.
3. பங்குபற்றுபவர்களுக்காக Video Resume / Visume தயாரிப்பதற்கான வசதிகள் செய்துகொடுக்க உள்ளதனால் தமது Visume Soft Copy கொண்டு வருவதற்கு Pen Drive / Data Traveller ஒன்றினைக்கொண்டு வருவதற்கு இயலுமான வகையில் பங்குபற்றுபவர்கள் உரிய உபகரணங்களைக்கொண்டு வருதல் வேண்டும்.
4. Skype தொழிநுட்பத்தின் ஊடாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வாய்ப்புக்களை வழங்க இருப்பதுடன் சான்றிதழ்களை Scan செய்து Soft Copy இனைக் கொண்டு வருதல் மேற்படி பணிக்கு இலகுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதனால் ஆற்றல் உள்ளவர்கள் மேற்கண்டவாறு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**ஆலோசனைச்சேவைகள்**

தனக்கு மன அழுத்தத்தைக் கொடுக்கும் அல்லது வேறு யாரிடமும் கூற முடியாத கஷ்டங்கள்,உள அழுத்தங்கள் என்பவற்றிற்காக ஆலோசனை ரீதியான நிவாரணம் ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றும் அவ்வாறான சிறிய மன அழுத்தங்கள் தொடக்கம் தீர்வு காண முடியாத உள அழுத்தங்கள் வரையான நிலைமைகளுக்கு நிவாரணம் ஒன்றினைப்பெற்றுக்கொள்வதற்காக உச்ச அளவில் இரகசியத் தன்மை பேணப்படுவதுடன் மனநோயியல் மருத்துவ ரீதியான ஆலோசனைச் சேவைகளும் யொவுன்புர நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதனால் அவற்றிலும் உங்களுக்கு பங்குபற்ற முடியும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.9. விஷேட வலயங்கள்

## 3.9.1. ஊடக வலயம்



**ஊடகங்களின் கூடம் மற்றும் கண்காட்சிக் கூடம்**

யொவுன்புர நிகழ்ச்சிகள் நடைபெறும் பிரதேசத்தில் ஊடக மத்திய நிலையமொன்று நிறுவப்படும். இது கண்காட்சிக் கூடம் ஒன்றினையும் மற்றும் ஊடக மத்திய நிலையம் ஒன்றினையும் கொண்டிருக்கும்.

கண்காட்சிக்கூடத்தில் தேசிய இளைஞர் சேவைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் உள்ளடக்கப்படுவதுடன் மேற்படி புகைப் படங்கள் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் பெயரிப்பட்டு இருக்கும்.

ஊடக மத்திய நிலையத்திற்காக தேசிய மட்டத்திலான 30 ஊடகவியலாளர்கள் இருப்பதுடன் பிரதேச ஊடகவியலாளர்களும் அப்பணியில் இணைந்துகொள்வர்.மேற்படி ஊடகவியலாளர்களினால் நாளாந்த யொவுன்புர நிகழ்ச்சிகள் தொடர்பாக விரிவானதொரு ஊடகப் பிரச்சாரத்தினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்குப் புறம்பாக சகல தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடக நிறுவனங்களுக்காக வெவ்வேறான ஊடகக் கூடங்கள் ஊடக வலயத்தில் நிறுவப்பட்டுள்ளன.இதனூடாக விரிவான முறையில் யொவுன்புரய தொடர்பான ஊடகப் பிரச்சாரப் பணியினை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.மேற்படி ஊடக நிறுவனங்களினால் நேரடி ஒளிபர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யொவுன்புர கண்காட்சிப் பலகை

ஊடக மத்திய நிலையத்தை அண்மித்தவாறு கண்காட்சிப் பலகை ஒன்று நிர்மாணிக்கப்படுவதுடன் மேற்படி கண்காட்சிப் பலகையின் மூலம் யொவுன்புர தொடர்பான நாளாந்த பத்திரிகைகளில் பிரசுரமாகும் கடிதங்களை பிரசுரித்தல் மேற்கொள்ளப்படும்.இதனூடாக கட்டுரைகளில் யொவுன்புர நிகழ்ச்சியில் தொடர்புரும் இளைஞர் யுவதிகளுக்கு இப்பத்திரிகைத் துண்டங்களை (Paper Cutting) வாசிக்கும் வாய்யப்பு கிடைக்கும்.

### நினைவுகளைப் பதிக்கும் தோரணம்

26 வருடங்களுக்குப் பின்னர் நடாத்தப்படும் யொவுன்புர நிகழ்ச்சியானது இளைஞர் யுவதிகளுக்கு புதியதோர் அனுபவமாகும்.மேற்படி அனுபவங்களைப் பதிக்கும் தோரணம் ஒன்று ஊடகக் கூடத்தில் நிர்மாணிக்கப்படும்.எந்தவொரு கஷ்டங்களும் இன்றி தமது கருத்துக்களை இங்கு பதிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

## Youth FM வானொலி

20 கிலோ மீற்றர்கள் தூரம் வரை கேட்கக் கூடிய வகையில் யொவுன்புர பிரதேசத்தில் **Youth FM** வானொலி ஒலிபரப்பு செய்யப்படும்.ஆண்,பெண் அறிவிப்பாளர்களாக ஐந்து இளைஞர் யுவதிகள் கடமையாற்றுவதுடன் யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றும்அறிவிப்பாளராகக் கடமையாற்றும் திறமைகொண்ட இளைஞர் யுவதிகளுக்காகவும் **Youth FM** வானொலி ஒலிபரப்பில் அவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

## Selfy போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Selfy தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி எடுக்கப்படும் புகைப்படங்களை இப்போட்டிக்காக முன்வைக்க முடியும். யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் எந்தவொரு இளைஞர்,யுவதிக்கும் இந்தப்போட்டியில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கும்.. Face Book இனூடாக இப்போட்டியில் கலந்துகொள்ள முடியும் என்பதுடன் மேற்படி புகைப்படம் யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் பிரதேசத்தில் செயற்படும் Facebook Accounts இல் Share பண்ணப்படவேண்டும். அதற்கமைய கூடிய Like இனைப் பெறுபவர் Selfy புகைப்பட உரிமையாளரின் வெற்றியைப் பெற்றுக்கொள்வர்.

## செயற்பாட்டு புகைப்பட போட்டி (Activity Photo)

யொவுன்புர் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் இளைஞர் யுவதிகளுக்கு மேற்படி போட்டிக்காக கலந்துகொள்ள முடியும் என்பதுடன் யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் பகுதியில் நடைபெறும் செயற்பாடுகள் தொடர்பாக எடுக்கப்படும் ஆக்கபூர்வமான புகைப்படங்கள் இப்போட்டிக்காக முன்வைக்க முடியும்.இங்கு மிகவும் கூடிய ஆக்கபூர்வமான புகைப்படத்தினைத் தெரிவு செய்தல் சிரேஷ்ட நடுவர் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும்.ஆக்கபூர்வமான செயற்பாட்டுப் புகைப்படத்திற்காக பரிசு வழங்கல் மேற்கொள்ளப்படும்.

யொவுன்புர நிகழ்ச்சியில் நடைபெறும் சகல முக்கியமான நிகழ்வுகளையும் இலத்திரனியல்,அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக இணையத்தளங்களின் ஊடாக மக்களுக்கு அறியத்தருவதற்காக ஊடகவியலாளர்களுக்குத் தகவல்களை வழங்கல் மேற்படி ஊடகக் கூடத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.9.2. கல்வி மற்றும் கண்காட்சி வலயம்

i.தகவல் தொழிநுட்பப் பிரிவு

ii.தொலைத்தொடர்புப் பிரிவு

iii.கல்விப் பிரிவு

iv.தொழிநுட்பப் பிரிவுகள்



1. ***தகவல் தொழிநுட்பப் பிரிவு***

- தகவல் தொழிநுட்பத்தின் நவீன கண்டுபிடிப்புக்கள் ,மாற்றங்களை அறிமுகம் செய்தல்.
- தகவல் தொழிநுட்பப் பாவனையினை விளைதிறன் மிக்க முறையில் பயன்படுத்தல்
- இளைஞர் யுவதிகளுக்கு தகவல் தொழிநுட்பத்தின் பயன்களைப்பெற்றுக்கொடுத்தல்.

இலங்கையின் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சிகள்

I. **பிரதான மண்டபம்**

பிரதானமாக இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) தற்போதைய நிகழ்ச்சிகள் மற்றும் அடிப்படை ஆரம்பங்கள் தொடர்பான தகவல்களைப்பெற்றுக்கொள்ளல் இங்கு மேற்கொள்ளப்படும்.அவ்வாறே இங்கு வருகை தருபவர்களுக்கு இலவசமாக இணையத்தளத்தில் தொடர்பு கொள்வதற்கும் உரிய துறையுடன் தொடர்புகொண்டு செயன்முறையில் செய்து பார்க்கவும் வாய்ப்பு வழங்கலும் நடைபெறும்.

- பங்குபற்றும் ஒவ்வொரு நபருக்கும் மேடலே குறிப்பிடப்பட்ட அறிவூட்டல்களையும் தகவல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்படும்.அவ்வாறே இங்கு பல்வேறு வகையான போட்டி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் வெற்றியாளர்களுக்கு பரிசு வழங்கலும் நடைபெறும்.

## II. ஸ்மார்ட் சமூக வட்டம் (SMART Social Circle) மற்றும் அங்கம் வகிக்கும் தொழிநுட்ப யுகத்தில் இளைஞர்களின் வகிபாகம்

அடிப்படை ரீதியாக ஸ்மார்ட் சமூக வட்ட நிகழ்ச்சி தொடர்பாக விளக்கத்தினை அளித்தல் இங்கு மேற்கொள்ளப்படும் இளைஞர் சமுதாயத்தை நோக்காக்கொண்டு தமது வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக நவீன டிஜிடல் தொழிநுட்பத்தின் ஊடாகவும் மற்றும் சமூக ஊடக வலையமைப்பினைப் பயன்படுத்தியும் மற்றும் இணையத்தினூடான நேரடி விநியோக நடவடிக்கைகள் (on-line trading), இணையத்தினூடான நேரடித் தொழில்கள் (on-line jobs) தொடர்பாக அறிவினைப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.பங்குபற்றும் ஒவ்வொரு நபரும் ஸ்மார்ட் சமூக வட்டம் தொடர்பான ஆலோசனைகள் பயிற்சிக்கைநூல், மற்றும் ஏனையவை உள்ளடங்கிய விஷேட பரிசுப் பொதியொன்றினை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக கலந்து கள்ளும் சகல இளைஞர்களும் ஸ்மார்ட் சமூக வட்டம் தொடர்பான அறிவினைப் பகிர்ந்தளிக்கும் முகவர்களாக்க் கருதப்படுவர்.

## III. தொழில்சார் வழிகாட்டல்

பல்வேறு துறைகளிலுள்ள நிபுணர்களை இணைத்துக்கொண்டு (IT-BPO மற்றும் IT-BPM) தகவல் தொழிநுட்ப தொழில்சார் வழிகாட்டல் தொடர்பான விரிவுரைகள் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடாத்துவதும்,அது தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினையும் தகவல்களையும் முன்வைப்பதும் இதன் அடிப்படையாகும்.பங்குபற்றுபவர்களுக்காக தனிப்பட்ட ரீதயில் நிபுணர்களுடன் தொடர்புகொண்டு தொழில்சார் வாய்ப்புக்கள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இங்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

## IV. டிஜிடல் அரசு

இ- அரசின்முதலீடுகள் தொடர்பான அறிவினை வழங்குவதும் இளைஞர் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட தற்கால இ-அரச துறையின் பயன்பாடுகள் மற்றும் ஆரம்ப அடிப்படைகள் தொடர்பான தகவல்களை கலந்துரையாடுவதும் அடிப்படை நோக்கங்கள் ஆகும்.மேலும் பங்குபற்றும் குழுக்களுக்காக தற்போது பாவனையிலுள்ள இ- அரசின் முதலீடுகள் மற்றும் தொழிநுட்பங்களைச் செயன்முறை ரீதியில் செய்து பார்க்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

## V. நவீன தொழில்நுட்பம்

நவீன தொழிநுட்பம் தொடர்பாகவும் மற்றும் விஷேட தொழிநுட்ப அடிப்படைகள் தொடர்பாகவும் முன்வைத்தல்,மாதிரி வீடியோ ஆக்கங்கள் மற்றும் அறிவினை வழங்கலும் நவீன தொழிநுட்ப உபகரணங்களின் பாவனை தொடர்பாக சந்தர்ப்பத்தினை வழங்கலும் மேற்கொள்ளப்படும்.

## VI. தகவல்கள் பாதுகாப்பு,ஒழுக்க விழுமியங்கள் மற்றும் தகவல்கள் பாவனையின் சிறந்த பழக்க வழக்கங்கள்

இளைஞர் சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு தகவல் பாதுகாப்பு தொடர்பாகவும் மற்றும் தகவல்களைப் பயன்படுத்தும்போது பின்பற்றப்படவேண்டிய ஒழுக்க விழுமியங்கள் மற்றும் சிறந்த பழக்க வழக்கங்கள் தொடர்பாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் முன்மாதிரிகளைப் பயன்படுத்தி அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தல் Sri Lanka Certஇன் ஊடாக மேறகொள்ளப்படும்.நேரடிச்செயற்பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேறகொள்ளல்,ஏனைய அது தொடர்பான அறிவு ரீதியான தகவல்கள்,அச்சுப் பதிவு வெ ளியீடுகளை வழங்கல் இங்கு நடைபெறும்.

ட்ரோன் தொழில்நுட்பத்தின மூலம் புகைப்படங்களையும் மற்றும் காட்சிகளையும் பெற்றுக்கொள்ளல்,அறிவூட்டல்,முகாமிடல் பிரதேசத்தின் சகல செயற்பாடுகளையும் Cop புகைப்படக் கருவி உதவியுடன் தகவல் மற்றும் காட்சிப்படுத்தல் மேற்கொள்ளப்படும்.

## 2. தொலைத் தொடர்புப் பிரிவு

நவீன தொலைத்தொடர்பு பாவனைகள் தொடர்பாக இளைஞர் யுவதிகளை அறிவூட்டல் மற்றும் அனுபவங்களை வழங்கல்.

I. சிறி லங்கா ரெலிகொம் மற்றும் மொபிடெல் மற்றும் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் மூலம் கண்காட்சி முன்வைக்கப்படும்.

II. இலவசமாக WIFI வலயக் கண்காட்சிப் பிரதேசம் ,விரிவுரை மண்டப வளாகங்கள்,ஊடக வலயங்கள்,கட்டுப்பாட்டு அறை என்பவற்றை அண்மித்ததாக WIFI வசதிகள் வழங்கப்படும்.

III. மொபிடெல் கம்பனியின் ஊடாக பங்குபற்றும் 500 இளைஞர் தலைவர்களுக்காக இலவச சிம்அட்டைகள் வழங்கப்படும்.மேற்படி 5000 தொலைபேசித் தொடர்புகளுக்கு இடையில் கிடைக்கப்பெறும் மற்றும் பெற்றுக்கொள்ளும் அழைப்புகளுக்கான கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.

